

1769

காணாமற்போன காஷ்மீர்சுந்தரி!

தி சதரன் லாங்வேஜ் பப்ளிகேஷன்ஸ்
31, லிங்கிசெட்டி தெரு,
சென்னை-1

முதற்பதிப்பு: ஜனவரி, 1957.

விலை அணா 0-8-0.

இக்கதையின் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே.
யாரையும் குறிப்பிடுவனவல்ல.

மன்றம் அச்சகம், 26, நைனியப்பன் தெரு,
மண்ணடி, சென்னை-1

1

அம்மா! என்று குரல் கொடுத்து நின்ற அவன்மீது ஒருநாய் உள்ளிருந்து வந்து வேகமாகப் பாய்ந்தது. அவன் அதைத் தடுக்க முயற்சித்தபோது அவன் கையையும் கடித்து - அவனைக் கீழே தள்ளிய பின்னர் மீண்டும் உதைபட்ட பந்துபோலத் தாவித் தாவி வந்து கடிக்கத் தொடங்கியது. அதன் பயனாக அவன் கால்களிலும் கையிலும் உடம்பின் பல பாகங்களிலும் காயம் ஏற்பட்டு இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. அதன் போக்கையும் கடிக்கும் தன்மையையும் பார்க்க அது வெறி நாயோ என்று கூடத் தோன்

றியது. இதுவரை ஒருவாறு கையாலும் காலாலும் உதைத்து அதன் கொடுமையைக் குறைக்க முயற்சி செய்துகொண்டிருந்த அந்த மனிதன் இப்போது முழு ஆவேசத்தோடு தன் இடுப்பிலிருந்த ஒரு கத்தியை உருவி அடுத்தடுத்து அதனைக் குத்தினான். கத்திக் குத்தின் வலுவுக்கு ஆற்றமாட்டாமல் நாய் ஊளையிட்டுக்கொண்டே கீழேவிழுந்து மடியும் நிலையை அடைந்தது. அதுவரையில் யாரும் உதவிக்கோ என்ன செய்தியென்று அறியவோ முன் வரவில்லை. தன்னைத்தான் காத்துக் கொள்ளவும் - கடியின் பிடியிலிருந்து தப்பிக்கவும் கத்தியால் நாயை மேலும் மேலும் குத்தி அது சாகும் நிலையை அடையச் செய்தானென்றாலும் அது சாகப்போகும் தருவாயில் அதற்காகச் சிறிது வருந்தினான். எனவே சற்றுநேரம் அதையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, பின்னர் எழுந்து நடக்க முற்பட்டான். அவனுக்கு இயல்பாக இருந்த களைப்பும், நாயின் கடிவேதனையால் ஏற்பட்ட துயரும் சேர்ந்து அவன் ஊக்கத்தையும் உணர்ச்சியையும் போக்கியது சுருங்கக் கூறின் சாவின் இறுதி எல்லையை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

அவன் நினைவெல்லாம், தன் தாயகமான - தன் பிறந்த வீடான - தன் இதயபீடமான இந்திய பூபாகத்தை அடைந்துவிட வேண்டு

மென்பதுதான். இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றது அஜாஜ் காஷமீர் என்னும் பகுதியில். அது பாக்கிஸ்தான் பகுதியைச் சேர்ந்த இடம். அவன் சென்று சேர விரும்பிய இடம் ஸ்ரீநகர். அது இந்திய நாட்டெல்லை. எனவே அங்கிருந்து தன் நாட்டு எல்லையைச் சேர்வதற்குள் தன் உயிர் போய்விடுமோ என்பதுதான் அவன் துடிதுடிப்பு. சரியாக அவன் இந்திய எல்லையைச் சேரவேண்டுமானால் இன்னும் நூறு கெஜதூரம் செல்ல வேண்டும். இன்ன பல எண்ணங்களுடனேயே மேலும் நடந்துநடந்து பாக்கிஸ்தான் எல்லைக் கதவு (டோல்கேட்) சமீபம் வந்தடைந்தான். அங்குள்ளவர்களை விசாரித்ததில் இந்திய யூனியன் எல்லை இன்னும் பதினைந்து கெஜதூரத்திலுள்ளது என்பதை அறிந்தான். அதற்குள் அவனை விசாரித்த இராணுவ அதிகாரிகளிடம் இந்திய எல்லையின் தூரத்தையும் கேட்டுக்கொண்டவாரே சிறிது வேகமாகச் சென்று மேலும் நடக்க முடியாமல் கால்கள் தள்ளாடியவாறு கீழே விழுந்தான். அப்போது அவன் மயக்கமுற்ற நிலையிலிருப்பதை அங்கு வந்த இராணுவ அலுவல்காரர்கள் கண்டார்கள். அவன் கண்களும் சிறிது மங்கலான நிலையில் தன் முன்னே நிற்பவர்கள் யார் என்பதை ஆராயத் தொடங்கியது. அவர்கள் இந்திய நாட்டு அடையாளம் அணிந்திருப்பதைக் கண்டு சற்று உள்ளம்

தெளிந்தான். தண்ணீர் வேண்டுமென்று சமிக்ஞை செய்தான். கொண்டுவந்து கொடுக்கப்பட்டது. அதை அருந்திய பின்னர் பேச எத்தனித்தான். அப்போதைய அவன் நிலையைக் கண்ட மேஜர் இந்தர் ஸிங், "இப்போது பேச வேண்டாம் மிகவும் களைத்திருக்கிறாய் - முதலில் ஓய்வெடுத்துக்கொள் பிறகு பேசலாம்" என்று கூறுவதையும் கேட்காமல், மிருந்த வேதனையோடுங் கூட "யூசுப்கான்; பெரிய மாயாவி. திருட்டு நோட்டுக்கள் தயாரிக்கிறான்" என்றான்.

அவன் சொல்வதைக் கேட்டபோது அவனது இரங்கத் தக்க நிலையையே சிந்தித்துக் கொண்டிருந்த இந்தர்ஸிங் - இப்போது நீ மிகவும் களைத்துப் போயிருக்கிறாய். அதனால் முதலில் ஓய்வெடுத்துக்கொள் பிறவற்றை நாளை பேசிக்கொள்ளலாம் என்று கூறுகின்ற போதுதான் முற்கூறியவாறு அவன் பேசி முடித்தான். அவனது பேச்சின் கடைசிச் சொல் மீனு என்பதுதான். அடுத்தகணம அவன் இறந்துவிட்டான். உடனே இந்தர்சிங் அதற்குரிய அதிகாரிகளுக்குத் தெரியப் படுத்தி - டாக்டரை வரவழைத்துப் பிரேதப் பரிசோதனை முதலியன செய்யப்பட்டது. அப்போதுதான் அவனைப்பற்றிய பிரச்சினை களும் அதிகமாயிற்று. அங்கே யிருந்தவர்கள் அவன் எப்படியாவது இந்திய பூமியைச்

சென்றடைந்து விடவேண்டுமென்று துடித்த தாகவும், அவன் விருப்பப்படியே நிகழ்ந்து விட்டதென்றும் கூறிக்கொண்டு சென்றனர்.

டாக்டர் வந்தார். அவன் பைகள் சோதனை செய்யப்பட்டன. அவற்றிலிருந்து எடுக்கப் பட்ட ஒரு பர்ஸில், நூறுரூபா பாக்கிஸ்தான் நோட்டும், 80 ரூபா இந்தியா நோட்டுக்களும் இருந்தன. அத்துடன் ஒரு விஸிட்டிங்கார் டொன்றிருந்தது. அதில் 'அமிர்தலால் மெஹ்தா அஜாஜ் காஷ்மீர்' என்றுமட்டுமே எழுதப்பட்டிருந்தது. அதிலிருந்த ஒரு புகைப் படத்தில் 'மீனு' என்று பெயரெழுதப்பட்ட ஒரு அழகிய பெண்ணின் உருவம் அதிலிருந் தது. மற்றுமுள்ள சாட்சியங்களையும் - சுற்று நிகழ்ச்சிகளையும் குறித்துக்கொண்டு மேஜர் இந்தர்ஸிங்கிடம் விடைபெற்று தன் கைக் கடிகாரத்தைப் பார்த்து மணி பன்னிரண்டாய் விட்டதே என்று கூறியவண்ணம் சென்றார். டாக்டர்.

2

பம்பாயில் மிக வசதியான ஹோட்டல் ஒன்றின் அறையில் துப்பறியும் நிபுணர் சந்திரமோகன் வீற்றிருந்தார். அவர் பக்கத்து நாற்காலியில் வந்தமர்ந்த வண்ணம் சிறுபுன் முறுவலுடன் காட்சியளித்தாள் ஒரு பெண் மணி. கண்டவர் மயங்கும் கட்டழகு. பிறர் விருப்பத்தை வலிய இழுத்துத் தவிக்கச் செய்யும் பருவம் - நல்ல முகபாவம் - இத்தனை யும் ஒருங்கே அமையப் பெற்ற அவளுடன் பேசிக் கொண்டிருக்க எவரும் மறுக்கமாட் டார்கள். அத்தகைய அழகு மங்கையை வர வேற்புக் கூறுவதுபோலவே ''நீ வந்தால் ஏனோ ஆண்களின் கண்களும் உள்ளங்களும் அசையாமல் நின்று விடுகின்றன'' என்று கேலியும் உண்மையும் கலந்து பேசி நிறுத்

தினர். அவளோ அதற்கும் ஒரு புன்னகையைப் பதிலாக எடுத்தெறிந்துவிட்டு, "நீங்கள் வந்த அலுவல்கள் முடிந்துவிட்டதா ?" என்று கேட்டாள். அதைக் கேட்டதுமே சற்றுத் திகைப்புக்கொண்ட சந்திரமோகன்; "நான் என்ன அலுவலாக இங்கு வந்திருக்கிறேனென்பது உனக்குத் தெரியுமா ?"

"தெரியுமே! திருட்டு நோட்டுக்கள் தயாரிப்பவர்களைக் கண்டு பிடிக்க வந்திருக்கிறீர்கள். இது தெரியாதா ? எனக்கு"

"ஆச்சரியம்! உனக்கு இச்செய்தி தெரிய வருவதற்குக் காரணம்"

"வந்ததா சந்தேகம். துப்பறிபவர்களே இப்படித்தான். அவர்கள் கண்களுக்கு எதிலும் ஒரு மர்மம் நிறைந்திருப்பதாகவே தெரியும்."

"அவற்றில் பல உண்மையாகவும் இருந்துவிடுவதை என்வரையில், நான் பலமுறை கண்டிருக்கிறேன்"

"இப்போதைய என் கேள்வி அப்படிப்பட்டதொன்றுமல்ல! எங்களவர் வெளியூரில் வாணிபம் நடத்துபவர். அதனால் பெரும்பான்மையான இடங்களில் நடைபெறும் செய்தியும் நடைபெறப் போகும் செய்தியும் தெரிய முடியும். மேலும் நீங்கள் எந்த ஹோட்டலில் தங்கப் போகிறீர்கள். உங்களுடன் யார்

யார் வரப் போகிறார்கள் - இன்னும் இவை போன்ற தேவையில்லாத பிறர் தெரிந்து கொள்ள அவசியமில்லாத தெரிந்துகொள்ளக் கூடாத செய்திகளெல்லாம் கூட அன்றாடச் செய்தித் தாள்களில் வெளியாய் விடுகிறதே! மிகச் சாமான்யமானவர்களும் கூடத் தெரிந்து கொள்கின்ற இந்தச் செய்தியை, வியாபாரத்தின் காரணமாகப் பல பத்திரிகைகளைக் காண்கின்ற எனக்குத் தெரிவதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது."

என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அந்தப் பெண்மணியின் கணவன் அன்றையச் செய்தித்தாளையும் இரண்டு கோப்பை டீயையும் எடுத்துக்கொண்டு அந்த அறையினுள் நுழைந்தான். நுழைந்த அவன் "இவ்வளவு நேரம் இங்குதானிருக்கிறாயா? என்று கேட்டவண்ணம் டீயைக் கொடுக்க, அவள் வாங்கிக் குடிக்கும் நேரத்தில் சந்திரமோகன் செய்திப் பத்திரிகையின் பத்திகளைப் படித்துக் கொண்டே வந்தார். அப்போது குறிப்பிட்ட ஒரு செய்தியை மிக விளக்கமாகக் குரலை உயர்த்திப் படித்தார். அதாவது அச்செய்தியை யாவரும் அறியக் கூறுகின்ற மாதிரியிருந்தது. அந்தகைய செய்தி யாதெனில்,

"நேற்று இரவு இந்திய யூனியன் எல்லையில் அமிர்தலால் மெஹ்தா என்பவர் அகால மரணமடைந்தார்.

என்பதே! இதை அவர் படிக்கும்போது கேட்டுக்கொண்டிருந்த அவளும் அவள் கணவனும் ஏதோ அமிர்தலாலைப்பற்றி அறிந்தவர்கள்போல் காணப்பட்டார்கள். அதைக் கவனித்த சந்திரமோகன் அவர்கள் மூலம் அமிர்தலாலைப்பற்றித் தெரியக் கூடிய அளவு செய்தியைத் தெரிந்துகொண்டு அன்றிரவே ப்ளேனில் [illegible] வந்து சேர்ந்தார். அவர் வந்து சேர்ந்த நேரம் மிகவும் அகாலமாய் விட்டபடியால் குறிப்பிட்டபடி எவரையும் பார்த்து எதுவும் செய்துகொள்ள இயலவில்லை. ஆயினும் முயற்சி தளரா எண்ணத்துடன் ராணுவதளத்தை நோக்கிப் புறப்பட்டார். அங்கு சென்றதும் முதல் காவல்காரர்களைத் தாண்டி உள் சென்றார்.

3

இந்திய ராணுவ தளத்தின் அதிகாரி மேஜர் இந்தர்சிங்கினுடைய பணியாள் சற்று அயர்ந்த நித்திரையுடையவனாயிருந்தான். இருந்தாலும், வந்த அலுவலின் முதன்மையைக் கூறி எப்படியும்தான் இந்தர்சிங்கை உடனே பார்க்கவேண்டுமென்று வற்புறுத்தினார். அவரது வற்புறுத்தலுக்கு இணங்கி போன் மூலம் கேட்டான் பணியாள். அங்கிருந்து மேஜர் தூங்குகிறார் என்ற பதில் வந்தது. மீண்டும் சற்றுப் பொறுத்துச் செய்தியைக் கேட்டு உடனே சந்திரமோகனை அனுப்பி வைத்தான். இந்தர்சிங்கை சந்தித்த சந்திரமோகன் தான் யாரென்பதையும், தான் வந்திருக்கும் காரணத்தையும் விளக்கமாகச் சொல்லி, தனக்கு அவரால் ஆகவேண்டிய சகாயத்தையும் கேட்டுக்கொண்டார். அதற்கு

இந்தர்சிங், இது பற்றித் தானொன்றும் அறிந்ததில்லையென்றும், யாவும் கர்னல் தீனபந்த்பெனர்ஜியைக் கண்டுதான் கேட்க வேண்டுமென்று கூறினார். அத்துடன் இவ்வளவு நள்ளிராக்காலத்தில் அவரைச் சென்று பார்ப்பதைவிட இரவு தங்கிக் காலையில் சென்று பார்ப்பதே நலமென்றும் எடுத்துச் சொன்னார். ஆனால் சந்திரமோகன் தானிது பற்றிய செய்திகளைத் தெரிந்துகொண்டு நாளை மதியத்திற்குள் பம்பாய் சென்றுவிட வேண்டுமென்றும் கூறினார். ஆகவே அவர் வேண்டுகோளை மறுக்க முடியாதவராய் அவர் கேட்டுக் கொண்டபடி கர்னலைச் சந்திப்பதற்குரிய உதவியாக சிபாரிசுக் கடிதம் ஒன்றும் வரைந்து கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டு கர்னலின் மாளிகையை யடைந்து அவரைக் காணமுயற்சித்தபோது, வெளியிலுள்ள காவல்காரன் உள்ளே அனுப்ப மறுத்தான். இருவருக்கும் சற்று வாய்த் தர்க்கம் கூட நடைபெற்றது.

சந்திரமோஹன்: நான் பம்பாயிலிருந்து வந்திருக்கிறேன். மிக முக்கியமான காரியமாக அவரைப் பார்க்க வேண்டும்.

காவல்: எவ்வளவு அவசரமான காரியமாக இருந்தாலும் அனுமதி உத்திரவு இல்லாமல் நான் உள்ளே அனுப்ப முடியாது.

சந்திர: இதோ மேஜரின் கடிதம் இருக்கிறது பார்! அதற்குப் பிறகாவது என்னை உள்ளே அனுப்பு.

காவல்: மேஜரின் கடிதம் உள்ளே அனுப்புவதற்கா! (என்று வாங்கிப் பிரித்துப் பார்த்து) இது உமக்குச் சிபார்சுக் கடிதம். இக்கடிதத்தில் உம்மை உள்ளே அனுப்ப எந்தவித உரிமையும் தரப்படவில்லையே.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் சமயம் விழித்துக்கொண்ட கர்னல் வெளியே வந்து

"என்ன செய்தி! யாரது. இந்த இரவு நேரத்தில் இங்கு வந்து தொல்லை தருவது தான் முறையா?"

"நானொரு முக்கிய வேலையாக பம்பாயிலிருந்து வந்திருக்கிறேன். தங்களின் உதவியும் ஒத்தாசையும் எனக்குத் தேவை"

"இரவு நேரத்திலே வந்து தூக்கத்தைக் கலைக்க வேண்டுமென்பதற்காகப் பம்பாயிலிருந்து வந்திருக்கிறாயா? தூங்குபவனை எழுப்பியா நீ உதவியும் ஒத்தாசையும் கேட்கிறாய்! நான் தூங்காமலிருக்க வேண்டுமென்பதுதான் நீ கேட்கும் உதவியா?"

"இல்லை! என் சகோதரன் ஒருவன் இறந்துவிட்டான். அவனைப்பற்றிய முழு விபரங்கள் நான் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காகத்தான் வந்தேன்"

"புரிகிறது. நீ வந்திருக்கும் நோக்கமும்— அதற்காக நீ தேடிப் பிடித்திருக்கும் நேரமும் மிக நன்றாயிருக்கிறது. நான் உன் கிலேக்காக வருந்தவில்லை! உன்னைப்பற்றிச் சந்தேகப்படு கிறேன். செத்துப் போனவனைப் பற்றிய செய்தி தெரிய வந்திருக்கும் நேரமா இது! எதுவானாலும் அடுத்து இங்குநின்று பேசிக் கொண்டிருக்க வேண்டாம்! போகலாம்"

"நான் மிகவும் முறை தவறாது பேசிக் கொண்டே இருக்கிறேன். தாங்களதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள்"

"எது முறைத் தவறில்லை! நீ இந்த நள்ளிரவில் வந்திருப்பது தவறில்லையா? நான் போ என்று கூறி இவ்வளவு நேரமாகியும் இன்னும் நின்று சாதித்துக்கொண்டிருப்பது தவறில்லையா? எது தவறில்லை"

"நான் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவன்"

"உத்தியோகத் தகுதியைத் தெரிந்தும் மறந்தது பெருந் தவறு. யாராக இருந்தாலும் ராணுவதள சட்ட திட்டங்களுக்குக் கட்டுப் பட்டே நடந்தாக வேண்டும்."

"மேஜர், இந்தர்சிங்கின் சிபாரிசுக் கடிதம் பெற்று வந்திருக்கிறேன்"

"இந்த இரவில் சந்திக்க முடியாதென்று தான் கூறுகிறேன்"

என்றதும் மேலும் அங்கே நிற்க விரும்பாமல் விரைந்து வெளியேறினர் சந்திரமோகன். ஏற்படுகின்ற கால தாமதத்திற்கு வருந்தினாலும், சந்தர்ப்ப சூழ் நிலைகளின் தன்மையை எண்ணி மனந்தேறினர். அன்று நடந்துகொண்டதுபோல அவர் எந்தக் கேஸிலும் நடந்து கொண்டதில்லை. அதுவே முதல் முறையும் கடைசி முறையுமாகுமெனத் தனக்குள் முடிவு செய்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டார். அந்த நள்ளிரவிலும், தனக்கேற்பட்ட நிலையை நினைத்தவாறே 'ஸ்நோ ஒயிட்' ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தார். அந்த ஹோட்டல் மேனேஜர் அவரை வரவேற்று அவருக்கு மூன்ருவது மாடியில் 11 நிர் அறை காலியிருக்கிறதெனக் கூறித் திறவுகோலைக் கொடுத்தனுப்பினர். இரவு அதிக நேரமாய்விட்ட படியால் 'லிப்ட்' கருவியின் அலுவலாளன் தூங்கிவிட்டான். ஆகவே சந்திரமோகன் மாடிப்படிக்கட்டுகளின் வழியேதான் செல்ல நேர்ந்தது. அவ்விதமேசென்று, மூன்ருவது மாடியை யடைந்து ஒன்று இரண்டு மூன்றென பதினோராம் நம்பர் அறையை யடைந்தார். அந்த அறையைத் திறந்து விளக்கைப் போடுமுன் யாரோ உள்ளிருந்து தன்னைத் தாக்குவதைக் கண்டு

இருளிலேயே தாக்குதல் வந்த திசையை நோக்கி எதிர்த் தாக்குதல் தாக்கினார். மீண்டும் தாக்குதல் வரவே தானும் விடாது தொடர்ந்து தாக்கினார். கடைசியாக சந்திர மோகனின் தாக்குதலால் எதிரி கீழே விழுந்து விட்டதை யறிந்து, அறையின் விளக்கு சுவிச்சைப் போட்டார்- அந்த அறையைச் சுற்றிலும் பார்த்தபோது அங்குள்ள அலமாரியில் ஒரு நீளமான குத்துக்கத்தியிருந்தது. அது வரை அஞ்சாதிருந்த அவர்—இந்தக் கத்தி எதிரி கருதியவாறு தன்மேல் பிரயோகிக்கப் பட்டிருந்தால் தன் கதி என்னவாகுமென் பதை எண்ணும்போது உள்ளூர அவர் உடல் பதறியது. எனவே கத்தியை எடுத்து இடையில் செருகிக்கொண்டு வெளியில் அடிபட்டு விழுந்தவனைக் காண வந்தார். அவன் இன்னும் அங்கேயே கிடந்தான். அவன் பையைச் சோதனை செய்ததில் அதிலிருந்து ஒரு கவர் கிடைத்தது. அத்துடன் ஒரு யுவதியின் படமும் இருந்தது. அந்தக் கவரின்மேல் மஹமத்கான் C/o ஹோட்டல் ஸ்னோ ஒயிட்— ஸ்ரீநகர், என்று எழுதப்பட்டிருந்தது. கவர் டில்லியி லிருந்து வந்தது என்று மட்டும் தெரிய முடிந்ததே. தவிர யாரிடமிருந்து வந்த தென்ற விவரம் அறிய முடியவில்லை! அந்தப் பர்ஸின் மேல் யூசுப்கான் என்றுமட்டும் எழுதப்பட்டிருந்தது. தவிர வேறொன்றும் குறிப்பிடப்படவில்லை. மேலும் 6 பத்து ரூபா நோட்

டுக்களும் கொஞ்சம் சில்லரை நாணயங்களும் இருந்தன. அத்துடனிருந்த ஒரு அழகியுடன் ஒரு யுவன் உட்கார்ந்திருப்பது போன்ற ஒரு படம் இருந்தது. அந்தப் படத்தில் உள்ள இளைஞனின் முகம் மிகவும் மங்கலாகத் தெரிந்தது. அதனால் அவன் யாரென்று கண்டு கொள்ள முடியவில்லை. என்றாலும் அவனை மட்டும் எங்கோ பார்த்த நினைவு இருந்தது. இப்படி, சிந்தித்துக்கொண்டிருக்கும் வேளையில் அடிபட்டுக் கீழே விழுந்து கிடந்த அந்த முரட்டு மனிதன் மீண்டும் எழுந்து சந்திரமோஹனின் கையிலிருந்த பர்ஸ், கவர் படம் ஆகியவற்றைத் தட்டிப் பறித்துக்கொண்டு ஓடிமறைந்து விட்டான். சந்திரமோஹன் அவனைத் தொடர்ந்து பிடிக்கவோ, அவன் கீழே விழுந்து கிடந்தபோது அவன் யாரென்று கண்டுகொள்ளவோ முடியாத நிலைமையிருந்தது. காரணம் வெளிப்பக்கத்து விளக்குகள் யாவும் அணைக்கப்பட்டிருந்தது. மாடி அறைகளில் எவரும் இருந்ததாகத் தெரியவில்லை. என்றாலும் அவன ஓடிவிட்ட பின்னர் கீழே இறங்கி வந்து சுற்றுப்புறங்களில் தேடிப் பார்க்கலாம் என்றெண்ணி வேகமாகக் கீழே இறங்கி வந்தார். கதவு பூட்டப்பட்டிருந்தது. வாச்மேன் நன்றாகக் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். அதற்குமேல் அவனை எழுப்பவும் விரும்பவில்லை. ஒன்றுமட்டும் யூகித்துக்கொண்டார்.

தன் வரவை யறிந்த யாரோ தன்னை ஒவ்வொரு சமயமும் காக்க எத்தனித்தவண்ணமாய் இருக்கிறார்கள் என்பதை முடிவு செய்து கொண்டு அறையிலிருந்து கைப்பற்றிய கத்தி தன் உடம்பில் பாய்ச்சப்பட்டிருந்தால்' என்ற முடிவுடன் அபாயத்தை எதிர்கொண்டழைப்பது, கொண்ட குறிக்கோளைக் கெடுத்துவிடும் என எண்ணி அங்கு போடப்பட்டிருந்த ஒரு என்ற உறுதியுடன் கேட்டின் பக்கத்திலிருந்த இருக்கை மீதே இருந்து, மீதியிருந்த இரவுப் பொழுதைக் கழித்தார். விடிந்து எழுந்ததும் ஹோட்டல் மேனேஜரிடம் இரவு நிகழ்ச்சிகளைப்பற்றி ஒன்றும் தெரிவிக்கவில்லை. மௌனமாக இருந்து மேல் நடவடிக்கைகளைக் கவனிக்கலானார்.

4

இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு சென்னையி லுள்ள இன்ஸ்பெக்டர் ராமசாமி அய்ய ருக்கு டிரங்க்கால் செய்தார் சந்திரமோஹன். அப்போது "நீர் சென்றிருந்த அலுவலைப் பற்றிய முயற்சிகள் போதாது. இன்னும் நோட்டுகள் அதிகமாக வந்து கொண்டிருக் கிறன. ஆனால் செலாவணிமட்டும் குறைந் திருக்கிறதே தவிர வேறு பயனெதுவும் இல்லை! ஆகையால் விரைந்து காரியங்களைச் செய்யுங்கள்.

"நான் விரைந்துதான் செயலாற்றி வரு கிறேன். அதற்காகக் கிடைத்த ஒரு தகவலுக் காகவே இங்கு வந்துள்ளேன். பல உண்மை கள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. இங்கு இரா ணுவதளத்திற்குச் செல்லவும் மற்றுமுள்ள பிரத்தியோக இடங்களுக்குச் செல்லவும் கூட

அனுமதி உத்திரவு தேவைப் படுகிறது அதனை உடனடியாக அனுப்பிவைக்கவேண்டுகிறேன்" என்று கேட்டுக் கொண்டார். அதன்படி போன் செய்து திரும்பி வந்தபின் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வெளிச் செல்லத் தயாராயிருக்கின்றபோதே ஹோட்டல் 'கால்பாய்' வந்து ராணுவ உத்தியோகஸ்தர் ஒருவர் சந்திரமோகனைக் காணவந்திருப்பதாகக் கூறினான். அதன்படியே சென்று பார்த்தபோது அந்த உத்தியோகஸ்தர் அதிகார பூர்வமாக "அனுமதிச் சீட்டு" ஒன்று வழங்கிச் சென்றார். அதன் உதவியால் மிக ரகசிய இடங்களுக்கும் கூடச் செல்லத் தக்க வாய்ப்பு இருந்தது. அதைப் பெற்று ராணுவ உத்தியோகஸ்தருக்குரிய மரியாதையுடன் அவரை அனுப்பிவிட்டுத் திரும்புவதற்குள் போலீஸ் ஹைகமிஷனர் வந்து மற்றுமொரு அனுமதிச் சீட்டு வழங்கினார். பெற்றுக் கொண்ட சந்திரமோஹன் அடுத்த தன் அலுவலைப்பற்றிய எண்ணத்துடனேயே மாடியின் அறைக்குச் சென்றார்.

சற்றுநேரத்திற்கெல்லாம் ராணுவதளத்தையடைந்த சந்திரமோஹன் கர்னல் பெனர்ஜியின் மாளிகையைச் சென்று சேர்ந்தார். முறைப்படி மரியாதைகள் பெற்று உட்சென்ற சந்திரமோஹன் முன்னாள் இரவு நடந்த நிகழ்ச்சிகளையும் தன் எண்ணங்களையும்

விளக்கமாகக் கூறிவிட்டுப் பேச்சைத் தொடங்கினார்.

"கர்னல் ஸார்! தங்கள் ராணுவதள எல்லையில் உயிர்நீத்த அமிர்தலால்மெஹ்றா என்பவரைப்பற்றிய சில விவரங்கள் வேண்டும்"

"அதாவது உங்கள் சொந்தக்காரர் அமிர்தலாலைப்பற்றித்தானே! மிஸ்டர் சந்திரமோஹன் நேற்று இரவு அப்படித்தானே கூறினீர்கள்"

"கூறினேன்! நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லையே."

"எப்படி ஒப்புக்கொள்ள முடியும்; எங்கள் வரையில் இது மிகவும் பழக்கமான செய்தி மிஸ்டர்! செத்தவன் வந்து சொந்தமில்லையென்று விவாதிக்கப் போகிறான். ஆகையால் இதுபோன்ற விஷயங்களில் கண்ணும்கருத்துமாக இருக்கும் சிலர் இம்மாதிரிச் சமயங்களில் தங்கள் உறவு - சொந்தம் என்று கூறி ராணுவச் சலுகையைக் கைப்பற்ற எத்தனிப்பார்கள். அவர்களிடம் மிகச் சுலபமான முறையில் சில குறுக்குக் கேள்விகளைக் கேட்டு உண்மையென்னவென்று கண்டுபிடிக்க முடியும். அதேபோலவே நீங்கள் நேற்றுக் கூறியபோது அவன் சொந்தக்காரர் யாரும் இருக்க முடியாதென்ற நம்பிக்கை! ஏனென்றால் பாக்கிஸ்தான் எல்லையிலிருந்து இந்திய எல்லையில்

தன் உயிரைவிட அவன் துடித்து வந்திருக்கிருன். நாயோ ஏதோ அவனை நன்ருகக் கடித்திருக்கிறது. அப்போது ஏற்பட்ட காயமோ அல்லது வேறு அடிபட்ட காயமோ கையிலும் இருக்கின்றன. இதுவரையில் யாராலும் கவனிக்கப்படாமலிருக்கக் தகுந்ததாயிருந்திருக்கிறது அவன் நிலை. அல்லது இப்படித் துன்புறுத்தியாவது அவனை எல்லை கடத்திவிட வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள் யாரோ அப்படிச் செயலாற்றியிருக்க வேண்டும். அப்படியிருக்க நியாயமில்லை. அவனே இந்திய எல்லை எது என்ற துடிப்புடனேயே யாவரிடமும் விசாரித்துக் கொண்டே வந்திருக்கிருன். அல்லாமல் அவனை இந்திய எல்லைக்கு யாரேனும் துரத்தியிருந்தால் அவர்கள் அவன் பிணத்தின்மீது அக்கரையாகத் தேடி வர மாட்டார்கள். வேறு வகையாகத் திருடர் - கொலைக்காரர் செயலாற்றியிருந்தால் அவனிடமுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டிருக்கும். மேலும் தற்கொலையா! கொலையா! அகால மரணமா! என்று முடிவு செய்யப்படாத நிலையில், குற்றுயிருடன் மயக்கமாய் வந்து, பிறகே உயிர் நீத்த ஒருவனைப் பற்றிச் செத்துவிட்டதாகத் தெரிந்த பிறகும்கூட அவனைப்பற்றிய விவரம் கேட்க எவர் வருவார்கள்! ஆகவே அப்படிக் கூறியனுப்பினேன். அதுமட்டுமல்ல. தங்கள்

பேரில் ஏற்பட்ட சந்தேகம் தெளியத் தங்களைப் பின்தொடர்ந்தே தெரிந்து வர ஆள் அனுப்பி தாங்கள் ஸ்னோஹயிட் ஹோட்டல் ரூம் 11ல் இடம் பெற்ற செய்தியையும் தெரிந்துகொண்டேன். அதனால்தான் இன்று காலை மேலிடத்திலிருந்து வந்த அனுமதிச் சீட்டை விசாரித்தறியாமலே ஹோட்டலுக்கு அனுப்பி வைத்தேன்" என்று விவரமனைத்தும் கூறினார். இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த சந்திரமோஹன்,

"தாங்கள் ராணுவத் துறையைவிடத் துப்பறிதலிலும் தகுதி வாய்ந்திருக்கிறீர்களே!"

"அது எங்களுக்கு அவசியமாயிற்றே! சமயத்தில் வேவு பார்க்கவரும் நம்மவர்களும் வேற்று ஆட்களும் உண்டு. அவர்களைக் கண்டறியவே இந்தமுறைப் பயிற்சி வேண்டுமே!"

"சரி! அமிர்தலாலைப்பற்றிய விவரங்கள் எனக்குத் தேவை."

"அதை உங்களுக்கு விளக்கும்படி செய்கிறேன். கேட்டுத் தெரிந்துகொண்டு பிறகு தேவை யென்ன என்பதைத் தெரிவித்தால் ஆவனசெய்து தருகிறேன்"

என்று சொல்லி மணியை அடித்தார். அங்குவந்து நின்ற சேவகனிடம் "ஹவில்தார் ஸ்ரீதர்லாலைக் கூப்பிடு" என உத்தரவிட்டார். "ஹவில்தார் ஸ்ரீதர்லால் உங்களுக்கு இது

பற்றிய விவரங்களை விளக்குவார். அவரைக் கேட்டு மேற்கொண்டுள்ள உண்மைகளை நீங்கள் சுலபமாக அறியலாம்.

இவ்வாறு சொல்லும்போதே 'ஹவில்தார் ஸ்ரீதர்லால்' வந்து சேர்ந்தார். முறைப்படி மரியாதை செய்து நின்ற ஸ்ரீதரை நோக்கி,

"ஸ்ரீதர்! இவர் துப்பறியும் நிபுணர் சந்திர மோஹன். இவர், அமிர்தலால் மெஹ்தாவைப் பற்றிய செய்திகளை அறிய வந்திருக்கிறார். ஆகையால் அதற்குரிய செய்திகளையும் ரிக்கார்டுகளையும் இவருக்குக் கொடு"

என்று உத்தரவும் கொடுத்து அறிமுகம் செய்து வைத்தார். அதன்படியே ஸ்ரீதர்லால் அதிகாரப் பூர்வமாகத் தன்னிடம் கொடுக்கப் பட்டிருக்கும் அமிர்தலாலிடமிருந்து பரிசோதித்துக் கைக்கொள்ளப்பட்ட தஸ்தாவேஜு-களைக் கொண்டுவந்து முதலில் கொடுத்து அதனை விளக்கினார்.

அந்த தஸ்தாவேஜு-களில் ஒன்றான 'மீனு' என்று பெயர் எழுதப்பட்ட படத்தை சந்திர மோஹன் உற்றுக் கவனித்தார். அது முதல் நாள் ஹோட்டல் மாடியில் தன்னுடன் மோதிக் கொண்ட முடனிடம் இருந்த படத்தைப் போலவே இருந்தது. ஆகவே இந்தப் படத்திற்கும் அவன் வைத்திருந்த படத்திற்கும்

ஏதோ தொடர்பிருக்கிறது என்றும், அமிர்த லால் அதில் ஒரு முக்கிய பாகம் வகிப்பவஞக இருக்க வேண்டுமென்றும் உறுதிசெய்து கொண்டார். அத்துடன் மற்றுமுள்ள இறுதி வாய்க் குழப்பத்தின்போது அவன் கூறிய தாகக் குறிக்கப்பட்டிருக்கும் செய்தியில் யூசுப் கான், மாயாவி...மீஞ என்ற சொற்களைப் பற்றிச் சிந்திக்கலாஞர். அதோடு அவனுட னிருக்கும் ராணுவ உத்தியோகஸ்தர் யாரா யிருக்கக்கூடும் என்றும் பெரிதும் ஆலோசித் தார். ஸ்ரீதர்லால் அவர் சிந்திப்பதைக் கவ னித்து, ஒரு செய்தி விளக்கிச் சொல்ல மறந்து விட்டேன். இந்தப் படம் ஒரிஜினலல்ல. இதன் ஒரிஜினலில் இங்கி கொட்டிவிட்ட காரணத்தால் இதற்கென ஒரு தனி பிரிண்ட் போட்டுக் கொண்டேன். இதன் முதல்படத்தி லிருப்பது போலவே இதிலும் 'மீஞ' என்று இந்தியன் இங்க்கிஞல் எழுதி யிருக்கிறேன். தவிரவும் அந்த போட்டோவின் பின்புறத் தில் "ராஜா போட்டோ எம்போரியம் போபால்" என்ற விலாசம் இருக்கிறது. அங்கு சென்ருல் இப்படம் பற்றிய செய்தி களைத் தெரியலாகுமென்று நம்புகிறேன் என்று கூறிஞர்.

உடனே சந்திரமோஹன் ஏதோ ஒரு முடி வுக்கு வந்தவர்போல - கர்னலை நோக்கி

போபாலுக்கு எப்போது பிளேன் புறப்படு கிறது எனக் கேட்டார். அவர் உடனே அட்டவணையைப் பார்த்து, மூன்றரைமணிக்குப் புறப்படுகிறது. இன்னும் மூன்றுமணி நேரங்களிருக்கின்றன என்று கூறினர். ஆகவே இன்னும் கேட்க வேண்டுமென்று விரும்பியவைகளை யெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டு, இராணுவதள முறைப்படி தான் பெற்றுக்கொண்ட தஸ்தாவேஜுகள் புகைப் படம் ஆகியவைகளுக்கு ரசீது கொடுத்து விட்டு, அனுமதி பெற்றுக்கொண்டு புறப்பட்டார். கர்னல் ஹவில்தார் இருவரும் நின்று வழியனுப்ப சந்திரமோஹன் விமான நிலையத்தை வந்தடைந்தார்.

விமான நிலையத்திலேயே அங்கங்கு சுற்றிப் பார்த்துத் தனக்குக் கிடைக்கக் கூடியவைகள் ஏதாவதிருக்கிறதாவென ஆராய்ந்தார். பின்னர் சிறிதுநேரம் ஓய்வெடுப்போம் என்ற முடிவுடன் வெயிட்டிங் ரூமில்சென்று அங்குள்ள சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம நெட்டுயிர்த்து, இன்ஸ்பெக்டர் சொன்னவற்றைப் பற்றிச் சிந்திக்கலானர். த்ரிலோக்சந்த்ர கபூர் என்பவன் ஹோட்டலில் தங்கி யிருப்பதைக் கண்டுபிடித்து அவனிடம் கேட்டால் அவன் பல உண்மைகளைச் சொல்வானென்றதும், பணந்தான் அவனுக்கு முக்கியமென்றும் கூறியதையும் எண்ணியவாறு, பணத்திற்

காக உண்மை கூறுவதாயிருந்தால் அவன் கூறுவதனைத்தும் உண்மை என்பதில் என்ன உறுதி—என்று குறிப்பிட்ட காலமாய்விட்ட படியால் விமானத்தின் பயணத்திற்கு ஆயத்தமாகச் சென்று ஏறினர்.

5

நீண்ட பெருமூச்சு எதிரொலிக்கத்தான். இருக்கக் கூடாத இடத்தில் இருந்தாள் ஒரு எழில் மங்கை. மென்மலரோ என்று புகழ்ந்து வருடப்பட்ட அவள் கரங்கள், கண்டார் மோகிக்கும் கட்டழகு, நல்ல இளமை இவையெல்லாம் இரும்புக் கம்பிகளின் பாதுகாப்பில் - இருட்டறையின் தோழமையில் அடங்கிக் கிடந்தது. மலர் முகமென்று சொல்லப்பட்ட மதிவதனத்திலே கண்ணீர் வழிந்த கோடுகள் மடிந்திருந்தன. நாணத்தாலும் - ஆவல் மிகுதியாலும் சிவந்து சுழன்ற கண்கள் அழுதழுது சிவந்தன. மலரணையை மல்லிகையால் நிறைத்து அதன்மீது தலை சாய்த்து மெல்ல உறங்கும்போது மலர்பதித்த வடுத்தோன்றும் கன்னங்கள் கம்பிகளின் வழியே எட்டிப் பார்த்துப் பார்த்துக் கூம்பி

களின் அழுத்தத்தால் கீரல்கள் போலத் தோன்றின. அடிக்கொருமுறை அந்தக் கம்பிகளை வீணை நரம்பை மீட்டுவது போலத் தடவித் தடவிக் கைவிரல்கள் சிவந்தன. அடுத்தடுத்து அழுகையும் தேம்பலும் வந்து கொண்டே இருந்தது. தன் முன்னாள் நிலைகளைச் சிந்தித்தாள். தனக்காக உயிரையும் கொடுப்பேனென்று உறுதி கொடுத்தவர்களின் தன்மைகளை நினைந்தாள். அந்த நினைவு சற்றே இன்பமளித்ததென்றாலும் அதனைத் தொடர்ந்து தற்போதைய நிலை கண்முன் வரவே, தொடர்ந்து கண்ணீரும் அழுகையும் காத்திருந்தது. இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த நிலை. ஒன்ரு இரண்டா, ஆறு ஆண்டுகள். அதை எண்ணும்போதே அவள் உள்ளம் பதறியது. மனம் எங்கெங்கோ சென்று சுழன்றது. தான் எதை மறந்தாலும் தாய் தந்தையரின் நினைவைமட்டும் அவளால் மறக்க முடிந்ததில்லை. இந்த நிலையிலும் அந்த நினைவு அவளை வந்து வாட்டியது. மீண்டும் அழுதாள். அழாதே என்று ஆற்றுவார் யார். தேற்றுவார் எவர்.

தனக்குத்தானே முணகிக் கொண்டாள். அம்மா! அப்பா! அண்ணு! தாங்கள் என்னை விட்டுப் பிரியாதிருந்திருந்தால் என் நிலை இந்தக் கதியை யடைந்திருக்குமா? எதற்கோ வந்த கலகம் என் வாழ்வில் இத்தனை குழப்

பத்தை ஏற்படுத்திவிட்டுப் போய்விட்டதே! என்றெண்ணித் தேம்பினாள். அழுதழுதுகண் ஓய்ந்துவிட்ட காரணத்தால் ஏற்பட்ட அயர்ச்சியில் சிறிதே கண்ணை மூடினாள். அப்போது அவள் பழைய வாழ்க்கை நிலைகள் அவள் கண்ணுள்ளே கனவாகத் தோன்றியது. புயலிலும் அமைதிபோல துன்பமே நிறைந்து இன்பத்தை நினைப்பூட்டி மகிழ்விப்பதுபோல அவ்வளவு இன்னல்களுக்கிடையிலும் சிறிதே இன்பம் துளிர்த்தது.

அன்று மாலைப்போது, தன் தாய் தந்தையருடன் காஷ்மீர் நகரத்தின் அழகிய தெருக்களையும், இயற்கை அழகுநிறைந்த நீரோடை, சாலைசோலைகளையும், தெப்ப நீர்த்தேக்கங்களையும் தன் அண்ணன் விளக்கிக் கூற, தாய் தந்தையர்கள் மகளின் மகிழ்ச்சியைக் கண்டு மகிழப் பவனி வந்தகோலம் பளிச்செனத் தோன்றியது. அடுத்து பின்னொருநாள் எங்கெங்கும் ஓலமிடும் குரல் ஓடித்தவிப்போரின் கலக்கக் குரல் இவைகளுக்கு நடுவே தன் சொந்தத்தை - உரிமையை - தாய்தந்தையரை அவள் இழந்தாள். அன்றே உலகில் தனதென்ற யாவையும் இழந்தாள். எப்படி வளர்ந்தாள் வளர்க்கப்பட்டாளென்பதை அவளாலேயே யூகித்துணர்ந்து கொள்ள முடியவில்லை. அவ்வப்போது உதவியவர்களும் ஏன்

உதவினர்கள் என்பதையும் பகுத்துணரக் கூடவில்லை அவளால் இத்தகைய உதவி மனப்பான்மை படைத்தவர்கள் உலகில் அநேகருண்டு என்றே அவள் கருதினள். பயன் கருதாது துணைச் செய்வோர் எவரு மில்லை என்பதை அவளால் நிச்சயிக்க முடிய வில்லை. வளர்ந்தாள். வளமான பருவத்தை எய்திவிட்டாள். இப்போது அவள் வாய் மொழிக்கு வகை தேடி நிற்பாரும், அவள் தன் பக்கத்தில் வரமாட்டாளா என்று ஏங்கித் துடிம்பாரும், கண்ட இடத்திலேயே அவள் எங்கிருக்கிருளென்று விலாசம் விசாரிபபோ ரும், சந்தர்ப்பங்களில் அவளைச் சந்திக்க வகை யென்னவென்று வழி வகுப்போரும் இவ்வாருகப் பலரின் கருத்துக்கு வேலை கொடுக்கும் பாத்திரமாய் விட்டாள் அவள். நாட்டிய மண்டலியின் நடனமாது அவள். கண்சென்ற இடங்களிலெல்லாம் மற்ருேர்கண் தன்னை நோக்குவதைக் கண்டு — அதற்குப் பொருளென்னவென்று கண்டுகொள்ள முடி யாத நிலையிலிருந்தாள். எத்தனை நாளைக்குத் தான் த்னிப் பொருளாகவே வாழ முடியும். தான் முயற்சித்தாலும் ' இயற்கை துணைச் செய்யாதே! அதுவும் இளமையும் அழகை யும் கோண்டு வனப்பும் வளமும் நிறைந்த அவளுக்கு வாய்க்கின்ற சந்தர்ப்பங்களையோ கேட்க வேண்டும். புது மலராக இருந்த

அந்தப் பொன்னொளி மேனியாளின் சிந்தனையை மெதுவாகக் களறினன் ஒரு மேனியழகன். அவன் அவளை ஒருமுறை நடனமண்டலியில் சந்தித்தான். கண்கள் சந்தித்தன. முதல் சந்திப்பே இதுதான் என்று விழிவழி மொழி பேசிக் கொண்டனரோ என்னவோ—ஒருவர் சென்ற திசையை நாடி மற்றவர் செல்வதும். தன்னை நாடி வருவாரா என்ற நாட்டத்தால் வருகையறியவும், அதன் பயனுல் உள்ளம் அறிந்து கொள்ளுதலுமாக மாறினர். இந்த நிலைகளுக்குரிய பயன் விரைவிலேயே வந்தெய்தியது. உள்ளம் ஒன்றுபட்ட இருவருக்கும் ஓய்வுநாள் ஒன்ருக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை அவருக்கும் விடுமுறை, அவளுக்கும் அன்று ஓய்வு நாள் ஆதலின் அதனைப் பயன்படுத்திக் கொண்டனர் இருவரும். மௌன வாசத்திலேயே பிரயாணத் தொடர்புவரை வளர்ந்திருந்தது. காஷ்மீரின் அழகிய நதியில் படகுப் பிரயாணம் செய்தனர். குறித்த இடத்தில் இருவரும் வந்திறங்கினர். தங்கி யிருந்தனர். பெரும் அமைதிக்கு நடுவில்.

"உன் பெயரென்ன?" என்று கேட்டார் அவர்.

"என் பெயர் மீனு" இது அவள் மறுமொழி.

இதற்குப் பிறகு அவளைப்பற்றிய முழு வரலாறுகளையும் கேட்டுத் தெரிந்துகொண்ட பின்னர், அவளது நிலைக்கு மிகவும் வருந்தி அவளுக்கு உதவி செய்வதாகக் கூறினர்.

" என் வாழ்நாளில் மறுபடியும் என் தாய் தந்தையரை நான் காண வேண்டும். இதுவே என் ஆசை இதை நிறைவேற்றி வைப்பீர்களா "

" நிச்சயம் நிறைவேற்றுவேன். கவலைப் படாதே! என் மனம் உன்னையே சரணடைந்து விட்டது; ஆக இனி உனக்காக நான் எதுவும் செய்யக் காத்திருக்கிறேன்."

என்று உறுதி கூறினர் 'லெப்டினெட் கர்னல் ராமசர்மா! அவர் ராணுவ உத்தியோகஸ்தர். தன் உத்தியோகத் தகுதிக்கேற்ற உடல்வளமும் உறமும் படைத்தவர். தோற்றத்தில் நல்ல அழகுடையவர். இவ்வாறு ஒரு நாள் தொடங்கிய நட்பு, மெள்ள மெள்ள வளர்ந்து பெருகிற்று. வழக்கமாக ராமசர்மா மீனுவாகினர். மிகச் சாதாரணவர்களாயிருந்தால் அவர்கள் தொடர்புக்குப் பலவித கட்டுக் கதைகளும்—ஒட்டுக் கதைகளும் கூறப்படும். இவர்களோ இருவரும் இரண்டு பெரும் தகுதியிலிருந்தனர். எனவே யாரும் எதுவும் பேசவில்லை. அவர்கள் நடை முறைகளும் போக்குவரத்தும் யாரும் எதுவும் சொல்ல

நினைக்கத் தகுந்த அளவுகூட இல்லை. இவ்விதம் நிகழ்ந்து வந்த இவர்களின் மகிழ்ச்சி வாழ்வு—சுழன்றுவரும் சக்கரத்தின் அடையாளக் குறிப்புப் போல துன்பத்தின் நேரே வந்து நின்றது. கர்னல் சர்மா யுத்த முன்னணிக்கு மாற்றப்பட்டார். அவர் செல்லுகின்ற முன்தினம் மீனுவை வந்து பார்த்து,

"நீ எதற்கும் கவலை கொள்ளாதே! நான் எங்கிருந்தாலும் உன் நினைவுமட்டும் என்னுள் நிறைந்திருக்கும். நான் சென்ற சில தினங்களிலெல்லாம் உன் தாய் தந்தையரின் இருப்பிடங் கண்டறிய முயற்சிக்கிறேன். வருந்தாதே. கூடிய சீக்கிரம் நாமெல்லாம் ஒன்றுபட்டிருக்கும் காலம்வரும்" என்று சொல்லும் போது குரல் வெளிப்பட அழுதுவிட்டாள் மீனு. அவள் அதுபோன்று பற்றை அறுத்துப் பிரியும்நிலையினையும்—அதன் பயனையும்—அனுபவித்தறியாதவள். இதை கர்னல் நன்குணர்வாராதலினால், அவளைச் சமாதானப் படுத்திக் கையில் முன்னூறு ரூபா பணம் கொடுத்து செலவுக்கு வைத்துக் கொள்ளும் படிக் கூறி விடைபெற்றுச் சென்றார். அன்று முதல் நான்கைந்து தினங்களுக்கெல்லாம் ஊண், உறக்கமின்றி, உற்சாகமிழந்து, பூக்கடையில் ஒதுக்கித் தள்ளப்பட்ட ரோசாமலர் போல நாட்டிய மண்டலிப் பெண்களின் நடுவே தானும் வாடி வதங்கி யிருந்தாள். கர்னல்

சென்ற இரண்டொரு தினங்களுக்கெல்லாம் மீனுவுக்குக் கடிதம் வந்தது. அதன் பிறகு வந்த கடிதங்களும் அவளுக்கு வாழ்க்கையின் சுவையை நினைவுபடுத்திக் கொண்டிருந்தன. கடைசியாக வந்த ஒரு கடிதம் அவர் யுத்த முன்னணிக்குச் செல்லுகின்ற செய்தியைச் சுமந்து வந்தது. அது கடிதமாகமட்டுமிருக்க வில்லை. இன்பத்தின் இறுதியறிவிப்பாகவும் மாறிவிட்டது. அடுத்து அவளுக்குக்கிடைத்த செய்தி அவர் இறந்துவிட்டாரென்பதுதான். அதைக் கேட்ட அவள் துடித்தாள், துவண்டாள், புரண்டு அழுதாள், என்ன பயன். அந்தத் துயரமும் காலப்போக்கில் மாறியது. என்றாலும், கண்டதும் காணாததுமான இன்ப நினைவும் கற்பனைகளும் உள்ளத்தை உடற்ற ஆரம்பித்தன. இன்பத்தில் தேட்டமும், பறி போன மகிழ்வெண்ணி வாட்டமும் பெற்றாள். ஆகவே அவள் மனம் அலேவுற்றது.

சில நாட்களுக்குப் பிறகு, ஒரு வாலிபன் அவள் இருக்கும் அறைக்கு வந்து சேர்ந் தான். எதற்காகவோ வந்ததாகக் கூறி, அங்கு யாருக்காகவோ காத்திருப்பதாகச் சொன்ன அந்த இளைஞன், சந்தர்ப்பத்தை ஒட்டி மீனுவிடம் பேச்சுக் கொடுத்தான். அந்தப் பேச்சின் வழியாகவே அவள் உள்ளக் கருத்தை உணர்ந்துகொண்டான். அன்று மேலும் பேசிக்கொண்டிருக்கச் சந்தர்ப்பமில்

லாது போகவே மறுநாள் வந்து சந்திப்ப தாகக் கூறிச் சென்ருன். அதன்படியே மறு நாள் வந்து அவனேச் சந்தித்தபோது அவள் தேட்டத்தைத் தான் நிறைவேற்றி வைப்ப தாகவும், அதற்குச் சிறிது பணச் செலவு மட்டுமே ஆகுமென்றும் கூறினுன். எவ்வளவு பணம் வேண்டுமென்று கேட்டதற்கு, நானூறு ரூபாய் செலவாகுமென்று தெரிவித் தான். மீனு அவ்வளவு பணம் தன்னிடமில்லை என்பதைக் கூறி, கர்னல் கொடுத்துப் போன பணத்தின் மீதித் தொகையைக்கொண்டு தன் தாய் தந்தையரை அழைத்து வரக் கருணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அவனும் "ஏதோ! நீ இவ்வளவு சொல்லும் போது நான் என்ன சொல்லப் போகிறேன். முயற்சிக்கிறேன்" என்று கூறினுன். இவ் வாறு அவளிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவன் திரும்புவதற்குள் போலீஸா ரால் கைதுசெய்யப்பட்டான். காரணம் அவன் அதுபோலவே பொய் சொல்லிப் பிறர் பணத்தை ஏப்பம் விடும் எத்தன், பலநாள் போலீசுக்குப் பிடிபடாமல் தப்பித்துக்கொண்ட அவன் தற்போது அகப்பட்டுக்கொண்டான். இந்தச் செய்தியைக் கேட்டவுடன்தான், மீனு வுக்கு உலகத்து வாழ்க்கையின் ஒரு பகுதி புலனுயிற்று. நல்லவர்போல் நடித்துத் தீமையை மறைத்து, இதம் செய்வதுபோல்

பேசி இன்னல் விளைவிப்போரும் உண்டு என்ற எண்ணம் வந்தது. என்றாலும் தாம் விதைத்த வினை பொருளின் பயனைத்தானே அனுபவிப்பார்கள் என்ற முடிவுடன் தன்னைப் பற்றிய கவலையற்றிருந்தாள். கைவிட்டுப் போன பணத்தை யெண்ணும்போது, அந்தத் தொகையைத் தன் நல்லெண்ணத்தின் அறி குறியாகத் தந்துபோன கர்னலையும், அதை எதற்கும் உதவாமல் தட்டிப் பறித்து நடு வீதி யில் எறிந்தாற்போல—தானும் அனுபவிக்கா மல் போலீஸின் கையில் கொடுத்துத் தன்னை யும் தண்டனைக்குள்ளாக்கிக் கொண்டவனை எண்ணும்போது கர்னலின் களங்கமற்ற உள் ளத்தை அவளால் எண்ணுமலிருக்க முடிய வில்லை. அத்தகைய காதலைப் பிரிந்து இழந்து நிற்கும் தன் நிலையின் கொடுமையைக் கருதி வருந்தினாள். வாழ்க்கை வளர்ந்து வளம் பெற்றதேயன்றி மற்றேதும் அறியாத அவள் இனியும் நமக்கொன்று வரப் போவதில்லை என்றெண்ணிச் சும்மா இருந்தாள். அடுத் தொரு புதுத் தொல்லை தொடங்கியது. துன்ப மெல்லாம் இன்பத்தின் வடிவிலேதான் தோன்றும். அதற்குத் தோன்றாத் துணையாக நிற்பது சொற்கள்தான் என்ற தத்துவத்தை அவள் அறிந்துகொள்ளவில்லை.

ஒருநாள் மாலைப்போதில் அவள் தனியே உட்கார்ந்திருந்தபோது தன்னைத்தானே அறி

முகம் செய்துகொண்டு அவளுக்கு எதிரே வந்தமர்ந்தான் ஒருவன். அவன் சோதிடநூல் ஆராய்ச்சிக்காரன் போல முன் நடந்தவை களில், சில குறிப்பிட்ட சம்பவங்களைப்பற்றிப் பேசினான். மீண்டும் அவன் பேச்சின் மூலம் தனக்குரிய நல்லவைகளைப் பெற்றுக்கொள் ளலாமென்ற எண்ணத்தை அவளுக்கு ஏற் படுத்திவிட்டு--இரண்டாம் சந்திப்பிற்கு இடத் தையும் குறிப்பிட்டுவிட்டுச் சென்றுவிட்டான். மறுநாளை எதிர்நோக்கி யிருந்தாள் மீனா! தன் வரையில் எல்லாச் செய்திகளையும் அறிந்திருக் கும் அவனுக்குத் தன்மீது இரக்கம் நிச்சய மாக இருக்குமென நம்பினாள். அதிலும் அவ் வளவு பூர்வாங்கங்களையும் அறிந்துகொண்ட அவன் சுலபமாக என்னைக் கைப்பற்றிக்கொள் வதைவிட்டுத் தனிமையில் பேச வேண்டிய செய்திகளென ஒரு சிலவற்றை ஒதுக்கி வைத் துப் போனானே—உண்மையன்பு இல்லாமலா அவ்வாறு செய்திருப்பானென நம்பிற்று அவள் பேதை நெஞ்சம். வஞ்சகர்கள் பெரி தும் நல்லவர்கள் வடிவம் பெற்றுத் தான் வாழ்ந்து வருகிறார்கள் என்ற உண்மையை சுலபத்தில் எவ்வாறு அவளாலறிய முடியும். தவிரவும் அவன் கூறியவைகளில் தன் தந்தை யைப்பற்றிய செய்திகளை அவளால் நம்பாமலே இருக்க முடியவில்லை. முக்கியமாக தன் தந்தை யின் பூர்வாங்கமும்—அவர் புரட்சி மனப்

பான்மையுடன் அரசாங்கத்தையே எதிர்த்துப் பத்திரிகைகளில் எழுதி வந்ததையும்—தற்போது அரசாங்கத்திற்கஞ்சியே டெல்லியின் சமீபம் ஒரு சிற்றூரில் வாழ்ந்து வருகிருர் என்ற செய்திகளையும் கூறியபோது தன் தந்தையின் இருப்பிடம் அறிந்த ஒரு மனிதனின் நட்புத் தனக்குக் கிடைத்திருப்பதை எண்ணிப் பெரிதும் மகிழ்ந்தாள். ஆகவே மறுநாள் குறிப்பிட்ட நேரத்திற்குக் குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைந்தாள். அவனும் வந்திருந்தான். அவனைக் கண்டதும் அளவற்ற உள்ளக் கிளர்ச்சியுடன் உரையாடிக் கொண்டிருந்தாள். பிறகு மெள்ளமெள்ளத் தன் தந்தையைக் காணவேண்டுமென்கின்ற தன் ஆசையையும், அதன் பயனுல் தனக்கு ஏற்பட்ட இன்னல்களையும் 'வேதனையுடன் கூறியபோது, அவன் "நான் யாவும் அறிவேன்" என்று மிகச் சுருக்கமாக முடித்துவிட்டான். மேலும் அவன் கூறியதாவது:

"உன் தேட்டங்களை யெல்லாம் மிக எளிதில் நான் முடிப்பது மட்டுமல்ல, நீயேகூட அவர்களைச் சென்று அடிக்கடி பார்த்து வர ஏற்பாடுகளைச் செய்ய முடியும். இங்கு என் நண்பர் தீனபந்த் பெனர்ஜி என்று ஒருவரிருக்கிருர். அவர் மூலம் இந்திரலோகத்திலிருப்பவர்களைக்கூட இங்கே கூட்டிக்கொண்டு வந்து காண முடியும். அதெல்லாம் தேவையில்லை.

உன் சொந்த முயற்சியிலேயே நீ உன் தாய் தந்தையர்களைக் கண்டு மகிழத் தக்க ஒரு வாய்ப்பை இப்போது உனக்குத் தரப் போகிறேன். அதன்மூலம் நீ எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்—எதை வேண்டுமானாலும் செய்யலாம்''

என்று சொல்லியபோது அத்தகைய சர்வ காரியசித்தி சிந்தாமணியாதா யிருக்கும் என யோசித்தவண்ணமே தன் கற்பனைக் கனவுலகத்திலே சஞ்சரிக்கலானாள். அவனோ தன் காரியத்திலேயே கருத்தைச் செலுத்தியவனாய் "எதற்கும் சிந்திக்காதே! உனக்கும் எனக்கும் ஒரு ஒப்பந்தம். நீ விரும்புகின்றபடி நான் உன் தந்தை தாய்வசம் உன்னைச் சேர்த்து விட முடியும். அதற்குப் பிரதியுபகாரமாக நீ நான் சொல்லுகிறபடி செய்ய வேண்டும்'' என்று அவள் காதில் ஒரு செய்தியைச் சொன்னான். அந்தச் செய்தியைக் கேட்டதுமே அவள் திகைத்தாள். சற்று அஞ்சினாள். அதை எதிர்பார்த்திருந்தவன் போல,

"இதை நீ செயலாற்றினால் — மதிப்பு பெருமை, உல்லாசம், விருப்பம் நிறைவேறல், இந்திய சர்க்காரின் தயவு ஆகியவற்றைப் பெறலாம். அதன் மூலம் உன் தந்தையின் மீதுள்ள குற்றச்சாட்டுகளும் மன்னிக்கப் பட்டு, அவரும் தாராளமாக எங்கும் இருக்கலாம். இதில் சற்றேனும் தவறினாலோ—அல்

லது தவருன பாதையில் செல்ல. முயற்சித் தாலே இங்கு உனக்கும்—அங்கு உன் தந்தை தாய் முதலியோருக்கும் உயிராபத்து நடை பெறுவது நிச்சயம். ஜாக்கிரதை" என்ருன்.

இவற்றை யெல்லாம் கேட்ட அவள் முதலில் கட்டிய ஆகாயக் கோட்டையை இடித்துத் தள்ளி அயர்ந்து விட்டாள். "முன்பு நேர்ந்ததெல்லாம் பொருளுக்கும் மனதுக்கும் மட்டும் நஷ்டமேற்படுத்தியது. இப்போது உயிருக்கு—எனக்கு மட்டுமல்ல, என்னைப் பெற்ற பாவமன்றி மற்றெதுவும் செய்தறியாத என் தாய் தந்தையரின் உயிருக்குமல்லவா தீங்காய் முடிந்தது. கடவுளே உன் படைப்பில் இத்தகைய வஞ்சகக் கொடுஞ் செயல்காரர்களையும் ஏன் உண்டாக்கி யிருக்கிருய்." என்றெண்ணிச் சோர்ந்து பெருமூச்சுவிட்டாள். அவன் அதைப் பொருட்படுத்தாமல் உனக்கு ஏதேனும் கஷ்டங்கள் உண்டாகுமானல் அதை அவ்வப்போது நிவர்த்தி செய்ய இந்த 'யூசுப்கானின் முயற்சி தவருது! என்று கூறினன். இனி ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை யென்பதை நன்கறிந்த அவள் சரியென்று ஒப்புக் கொண்டாள். உடனே அவனல் ஒரு பெட்டி கொடுக்கப்பட்டது. அதைப் பெற்றுக்கொண்டாள். அன்றிரவு டில்லி நோக்கிப் புறப்பட்டாள். வழியெல்லாம் தன் நிலையையும்,

தனக்கு நேர்ந்த கதியையும் எண்ணி இது வரை இருந்து வந்த தாய் தந்தையர் தேட்டத்தில் இப்போது ஒரு புது அனுதாபமும் கலந்துவிட்டதைக் கண்டு கண்ணீர் வடித்த வண்ணம், ரயில் கம்பிகளுக்கு அப்பால் தெரியும் வெளியிடங்களையும் வானத்தையும் பார்த்தவண்ணம் பயணப்பட்டுக்கொண்டிருந்தாள். அவள் டில்லி வந்து சேர்ந்ததும். அங்கிருந்து போபாலுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள நவஜீவன் ஹோட்டலில் அவளை இருக்கச் செய்துவிட்டு, நாராயணன்மல் போய்விட்டார். ஹோட்டலில் தன் புதுஆடம்பர வாழ்க்கையை நடத்திக் கொண்டும்—தனக்கு யூசுப்கானல் கூறப்பட்ட செய்தியில் தன் பங்கில் கண்ணும் கருத்துமாகவும் இருந்தாள். ஒருநாள் அங்கு ஏற்பட்ட புது சிநேகிதியுடன் சினிமா பார்க்கச் சென்று திரும்பிய மீனு தன் அறையுள் நுழைந்ததும் திகைத்துப் போனுள். ஏனென்ருல் அவள் வைத்துச் சென்ற பெட்டி காணப்படவில்லை. அத்துடன் அவள் நிலைமையும் மிக மோசமாய் விடும் நிலையிருந்தது. காரணம் உடுத்திச் சென்ற துணிகளைத் தவிர வேறெதுவும் இல்லாமல் அனைத்தும் அந்தப் பெட்டியினுள்ளே தான் அடக்கம் செய்யப்பட்டிருந்தது. வேறு வகையென்னவென்று யோசித்து விசாரிக்க முடிந்த அளவு விசாரித்துப் பயனின்றிப்

போகவே மறுநாள் தான் மறைத்து வைத்திருந்த பணத்திலிருந்து இருநூறு ரூபாய்கள் எடுத்துக்கொண்டு துணிக்கடைக்கு புறப்பட்டாள். கடையில் சென்று துணிகளை வாங்கிக்கொண்டு பணத்தைக் கொடுக்கும்போது அவள் கைபதறிற்று. முகம் மாற்றமுற்றது. அவளையே பார்த்துக்கொண்டிருந்த கடைக்காரர் உடனே பையனைக் கூப்பிட்டு போனில் யாரையோ கூப்பிடச் சொல்லி உத்தரவிட்டார். இந்த நிகழ்ச்சிகளைக் கண்டு ஏதும்புரியாமல் திகைத்துக்கொண்டிருக்கும் வேளையில் சிறிது நேரத்திற்கெல்லாம் போலீஸ் அதிகாரிகள் வந்து சேர்ந்தனர். அவள் கைது செய்யப்பட்டாள். அதிகாரிகளிடம் அவள் முன் னடந்த ஹோட்டல் நிகழ்ச்சிகளை யெல்லாம் சொல்லியும் அவர்கள் "இதுதான் உனது முதல் தவறு என்று கருத இடமிருப்பதால் குறைந்த அளவு தண்டனை விதிக்கப்படுகிறது என்று கூறிச் சிறைச்சாலைக்கு அனுப்பினர்.

சிறைச் சாலைக்குள்ளிருந்த வண்ணம் தான் அவள் கடந்த கால நிகழ்ச்சிகளை எண்ணி உள்ளம் வெம்பினாள். ஒருநாள் மற்றுமொரு பெண்ணை அழைத்து வந்த போலீஸார் மீனா இருந்த அறைக்கே கொண்டுவந்து சேர்த்தனர். அப்போது சிறைக்காவலன்:-"தனிமையாக இருந்தாயல்லவா இதோ உனக்கொரு

துணை" என்று கூறிச் சென்றான். அவளைக் கண்டதும் மீனாவுக்கு யூசுப்கான் கடைசியாகக் கூறிய செய்தி நினைவுக்கு வந்தது.

"உனக்கு சங்கடங்கள் வரும்நேரத்தில் உன்னைக் காப்பாற்ற யூசுப்கானின் முயற்சி தவறாது" என்று கூறினானே அதன் படித்தான் இவள் இங்கு வந்திருப்பாளோ? அதற்கு அவள் இங்குவந்து என்ன பயன். என்போலவே கைதியாக வந்திருக்கும் இவள் என்னதான் யூசுப்கானின் முயற்சியால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தாலும் இங்கிருந்து எனக்கெப்படி உதவ முடியும். எல்லாம் வீண் எண்ணம் என்று நினைத்தவாறே புதிதாக வந்தவளைச் சற்று நேரம் உற்றுப் பார்த்திருந்துவிட்டுப் பின்னர் தன்போக்கில் இருக்கலானாள். இப்போதெல்லாம் அவள் நினைவு தாய் தந்தையர் உயிர் பிரிக்கப்படுமோ என்பதில்தான். அதிலும் தன் முயற்சிகள் பழுதென்று நினைக்கப்பட்டுத் தாய்தந்தையர் உயிருக்கு வினையாய் முடியுமோ என்று ஏங்கினாள்.

6

ராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட சந்திரமோஹன் நேரே விமானம்மூலம் போபால் வந்தடைந்தார். தன் பயண மேனியைச் சற்று திருத்திக்கொண்டு, நேரே ராஜா போட்டோ எம்போரியத்தை வந்தடைந்தார். எம்போரியத்தின் சொந்தக்காரர் அங்கிருந்தார். அவர் வழக்கமாகப் போட்டோ எடுக்க வருபவர்களை முகமன் கூறி வரவேற்று, உபசரிப்பதுபோலவே, சந்திரமோஹனையும் வரவேற்று வியாபார பாணியிலேயே பேசிக்கொண்டிருந்தார். தன்குறிக்கோளை நிறைவேற்றச் சந்தர்ப்பம் நாடும் சந்திரமோஹன் பலவகையாக அங்குள்ள சுற்றுச் சூழல்களை விசாரித்தறிந்து கொண்டு, "எனக்கு ஒரு போட்டோ சொந்தக்காரரின் விலாசம் தெரிய வேண்டும். அதைத் தங்களால் தெரிவிக்க முடி

யுமோ" என்ருர். அதற்கு எம்போரியத்தின் அதிபர்" போட்டோ இங்கு எடுக்கப்பட்டதாக இருந்தால் நிச்சயம் தெரிவிக்க முடியும்" என்ருர். உடனே சந்திரமோகன் "இங்கெடுத்திருப்பதனுல்தானே இங்கேயே வந்திருக்கிறேன்" எனக் கூறியவாறே தன் வசமுள்ள மீனுவின் போட்டோவை எடுத்துக் கொடுத்தார். அவர் " ஒஹோ! இது இங்கு எடுக்கப்பட்டது தான் இருங்கள் சொல்லுகிறேன் என்று சொல்லி—பெரும் பைல்களைப் புரட்டி, கடைசியாக ஒரு பைலிலுள்ள குறிப்புப்படி பேர் வழிச் சிட்டையைப் பார்த்து அட்டவணைகளைத் திருப்பிக் கண்டுபிடித்து 'அவள் ஒரு நடன மாது. ஹோட்டல் நவஜீவன் என்ற இடத்தில் நடனக் கோஷ்டியாருடன் இருப்பவள்" என்று கூறி எனக்கு அந்த ஹோட்டல் சொந்தக்காரரைப் பழக்கம். அதனுல் அங்கு வருபவர்களை விருப்பத்தின் பேரில் இங்கே அனுப்பி விடுவார், நானும் அதற்குரிய வியாபார முறைப்படி நடந்து கொள்வேன். என்று கூறியபின் தாங்களும் போட்டோ எடுக்க ஏற்பாடுகள் செய்வதாயிருந்தால் சௌக்கியமாகவே செய்து தருகிறேன் இங்கேயே வாருங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

"எனக்கப்படி ஒரு சந்தர்ப்பம் நேர்ந்தால் நிச்சயம் இங்கேயே வருவேன். உங்கள் முதல்

சந்திப்பை மறக்க மாட்டேன்'' என்று கூறிய வாறே ஹோட்டல் நவஜீவனை நோக்கி நடக்லானார்.

ராஜி போட்டோ எம்போரிய அதிபர் கொடுத்த விளக்கத்தின்படி, பாங்க் தெருவை யடைந்து அங்குள்ள நவஜீவன் ஹோட்டலில் சென்று விசாரிக்கலானார். உள்ளே நுழைந்ததும் பருமனும் சிவப்பு நிறமும் பொருந்திய ஒரு மனிதர் வந்து சந்திரமோகனை விசாரித்தார். சந்திரமோகன் அவரிடம் தான் நாடி வந்த அலுவலின் நிமித்தமாக மட்டுமல்லாது பொதுவாகக் குடும்பக்காரர் போலவே அவர் பூர்வீகம் முதல் உறவின் முறையார்வரை அத்துணை பேரையும் விசாத்தறிந்துகொண்ட பின்னர், தனக்குக் கிடைத்துள்ள விலாசத்தின்படியே மீனகுமாரியைப்பற்றிய புலன் விசாரணையில் இறங்கினார். மீனகுமாரி யென்ற பெயரைக் கேட்டதும் அந்த மனிதர், சிறிது அனுதாபமும் வெறுப்பும் கலந்த பாவனையில் பேச ஆரம்பித்தார்.

"அந்தப் பெண்ணைப்பற்றியா கேட்கிறீர்கள்! நீங்கள் அந்தப் பெண்ணின் உறவோ - அல்லது அறிமுகமானவரோ! எதற்காக அவளைப்பற்றி அவ்வளவு அக்கரையாக விசாரிக்கிறீர்கள். உம்...மனிதர்கள் வாழ்வில் புகழும் அந்தஸ்தும் வரும்போது அவைகளை அலைக்கழிக்கவும் அழித்தொழிக்கவும் சில

சக்திகளும், சக்தியுடையவர்களான சில மனி தர்களும் தோன்றுவார்களென்பதற்கு அவள் தான் அத்தாட்சி. அவள் இங்கேயேதான் இருந்துவந்தாள். நாட்டிய மண்டலியில் ஒருத் தியாக இருந்தாள். கொஞ்சம் பெயரும் கீர்த்தி யும் பரவ ஆரம்பித்தது. சிநேகிதர்களும் அதி கரிக்க ஆரம்பித்தனர். எல்லோரும் ஒரேமாதிரி அளவில் இருந்து விடுகிறார்களா? நல்லவர் போலவே தோன்றுகின்ற தீயவர்களும், தீய வர்களென்றே கூறத் தகுந்த தோற்றத்தில் மிகமிக நல்லவர்களும் இருக்கிறதை அவ ளெப்படி அறிய முடியும். வெளித் தங்கல்கள் அதிகமாயின. நாழிகைக் கணக்கு நாள் கணக் காக மாறி, இப்போது அப்படியே பெருகிப் போய்விட்டது. அவள் இங்கிருந்து எப்போது போனாள் என்பதுகூட நினைவிலில்லாது மறைந்து போய்விட்டது என்று கூறி முடித் தார்.

அவளிப்போது எங்கிருக்கிறாளென்பதாவது தெரியுமா? என்று கேட்டார் சந்திர மோகன்.

"தெரியாமலென்ன தெரியும்! சிறைக்கைதி யாக இருக்கிறாள்."

"சிறைக் கைதியாகவா? ஏன்?"

"ஏனா? இதென்ன கேள்வி? அர்ப்ப சக வாசம் பிராண சங்கடமென்பது தெரியாதா?

இது இப்போது உடலளவுக்குத்தான் சங்கடத்தைக் கொடுத்திருக்கிறது. இனிமேல் உயிருக்குத் தொல்லை தரும். சரி நமக்கேன் அதைப் பற்றிய பேச்சு. வேறு ஏதாவது நல்ல பேச்சுக்களைப் பேசலாம்''

''அய்யா! நான் வருகிறேன். சந்தர்ப்பம் ஏற்பட்டால் தங்களைப் பிறகும் வந்து சந்திக்கிறேன்.''

என்று கூறிவிட்டுச் சென்றார் சந்திரமோகன். ஹோட்டல் அதிபர் அவர் கேள்விகளையும் போக்கையும் பார்த்துத் தன் வரையில் ஏதேதோ கணக்குகள் போட்டுக்கொண்டு இருந்துவிட்டார்.

ஹோட்டலைவிட்டு வெளியேறிய சந்திரமோஹன் நேராகச் சிந்தித்தவாறே டாக்ஸி ஸ்டாண்டின் பக்கம் வந்து சேர்ந்தார்! அங்கிருந்து டாக்ஸி ஒன்றை அமர்த்திக்கொண்டு ஜெயில் சூப்பரிண்டெண்டெண்டின் மாளிகைக்கு வந்து சேர்ந்தார். அவரது மாளிகை ரிம் சிறைச்சாலையை அடுத்துள்ள தோட்டமும் வீடுமாக இருக்கும் இடத்தில்தான் இருந்தது. அங்கே வந்தடைந்த சந்திரமோகன் தான் செய்ய வேண்டியவைகளைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே யிருந்தார். இன்னும் சூப்பரிண்டெண்ட்டைக் காணமுடியவில்லை. ஆனால் அங்கு அடிக்கடி போலீஸார்கள் வருகையும், ஏதேதோ கெடுபிடிகளும்

மட்டும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. சற்றும் நேரம் தாமதித்துத்தான் சூப்பரின்டெண்ட்டை அவர் பார்க்க முடிந்தது.

சூப்பிரண்டைப் பார்த்தவுடன், தன்னைப் பற்றிய வரலாறுகளையும், தான்வந்த செய்தியின் விவரத்தையும் கூறி அவர் சகாயம் தனக்கு வேண்டுமெனக் கோரினார். அவர் கொடுத்த மறுமொழி சந்திரமோகனைத் திகைக்க வைத்தது. அதாவது:

நீங்கள் யாரைத் தேடி இங்கு வந்திருக்கிறீர்களோ! அதே நபரைத்தான் நாங்களும் தேடிக் கொண்டிருக்கிறோம். இந்த இரவில் அவனை எங்கெங்கு சென்று தேடுவதென்றே புலப்படவில்லை!

என்று கூறியதைக் கேட்டதும் பெரிதும் அயர்உற்றார் சந்திரமோகன். தன் அலுவல்கள் சுலபத்தில் நிறைவேற வகையற்றுப் போய்விட்டதே என்று வருந்தினார். மீனாவைச் சந்தித்தால் அவள் மூலம் இந்தக் கேஸின் பெருந்தலைகளை யெல்லாம் கண்டுபிடித்து விடலாம் என்பது அவர் முழு நம்பிக்கை. அது முடியாமல் போய்விட்டது என்றதும், சூப்பரின்டெண்ட்டெண்டினிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றார். இரவுப் பொழுதை எங்குக் கழிப்பதென்ற எண்ணத்துடன் நேராக ஹோட்டல் நவஜீவனுக்கே வந்து

சேர்ந்தார். அங்கு அந்த ஹோட்டல் அதி பரைக் கலந்து தான்சென்று திரும்பிய செய்தி யெதுவும் அவரிடம் கூறிக் கொள் ளாது இரவு தங்க வேண்டும் என்று கூறினர். அதற்கு ஹோட்டல் முதல்வர், காலம் கடந்துவிட்ட காரணத்தால் இப்போது பில் பதிவுசெய்துகொள்ள முடியாது. ஆனல் இங்கு டான்ஸிங் தியேட்டர் இருக்கிறது. அதற் கொரு டிக்கட் வாங்கிக் கொண்டால் இரவில் பெரும் பகுதியை அங்கே கழித்து விடலாம். பிறகு மறுநாள் கணக்கில் ரூம் பதிவு செய்து கொள்ள ஏதுவாகும் என்று சொல்லி, டான் ஸிங் டிக்கட் ஒன்றும் மறுநாள் கணக்கில் ஒரு ரூமும் பதிவுசெய்து அதற்குரிய சாவி முதலி யவைகளையும் கொடுத்துவிட்டார். அதைப் பெற்றுக்கொண்ட சந்திரமோகன் நேரே தியேட்டருக்குச் சென்று அங்கு நடைபெறும் நடனத்தைக் கண்டு களிக்க மனமில்லாமலும் வேண்டா வெறுப்புடனும் சென்று உட்கார்ந் திருந்தார். அவர் சென்றமர்ந்த சிறிது நேரத் திற்கெல்லாம் நன்கு அலங்கரித்து நவநாகரிய நங்கையாக ஒரு இளமங்கை வந்து சேர்ந்தாள். அவள் வந்ததும் பருந்தின் வாயிலிருந்து தவறி நீரில் விழுந்த மாமிசத் துண்டத்திற்கு மீன்கள் வந்து கூடுதல்போல அங்குள்ளோ ரின் பார்வை யெல்லாம் ஒருசேர அவளிருந்த திக்கையே நோக்கலாயின. வந்த அவளும்

அவனுடன் வந்த ஆடவனுமாக சந்திர மோகனை அடுத்து உட்கார்ந்தனர். அந்த அழகியின் கண்கள் அடிக்கடி சந்திரமோக னைத் தொட்டவண்ணமிருந்தன. முதலில் பார்வை, பிறகு சிறுநகை, அதன் பின்னர் பொருளே இல்லாத சில பேச்சுக்கள் இவைக ளால் தன் நினைவை அவனுக்குப் புலப்படுத் தினாள் அந்த நாரிமணி.

பக்கத்திலிருந்த ஆடவனுக்கு அது மிகவும் பொறுமையைச் சோதிப்பதாக இருந்தது என்றாலும் மிகவும் சமாளித்துக்கொண்டு இருப்புக் கொள்ளாமல் சற்று நேரத்துக் கெல்லாம் ஏதோ காரியமாக வெளிச்செல்வது போல எழுந்துசென்றான். எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றதைப் பெற்று மகிழ்வதுபோல அவன் சென்றதும் அவள் ஆவல் மிக்கவளாய் சந்திரமோகனிடம் உரை யாட ஆரம்பித்தாள். அவள் ஆசையின் எல்லையை அறிவித்தாள்.

அந்த ஆள் வெளிச்சென்று திரும்புவதற் குள் அவள் சந்திரமோகனை வற்புறுத்தித் தன்னுடன் "பால் டான்ஸாட" அழைத்துச் சென்றுவிட்டாள். வந்தவன் சற்றும் எதிர் பாராத ஏமாற்றமும் அதனால் கோபமும் கொண்டு, தியேட்டரை முறைத்துப் பார்த்த வண்ணமே உட்கார்ந்திருந்தான்.

மேடைமீது ஆடிக்கொண்டிருக்கும்போது அவள் உதடுகள் அசைந்தன. ஏதோ பேசுகிறாள் என்று கண்டபோது அளவற்ற கோபம் அவன் தலைக்கேறியது. அவள் பேசுவதால் தனக்கு அவமானம் ஏற்படுவதைவிட அபாயம் ஏற்படுமோ என்று அவன் துடிப்பதாக முகபாவனை காட்டிற்று. எது எப்படியானாலும் அவள் இங்கு வந்து தானே யாக வேண்டுமென்ற முடிவுடனே அடிக்கடி ஏதோ சில சைகைகள் மேடையை நோக்கிச் செய்த வண்ணமிருந்தான். அங்கிருப்போர் பார்வைக்கு அவன் இருப்பது குறிப்பாகத் தெரிய முடியாது என்றாலும் அவள் கவலை அவன் இருக்கிறானா இல்லையா என்பதேயல்ல! தான் விரும்பிப் பெற முடியாத ஒரு இன்ப விருந்து வலுவில் வந்து கிடைத்ததை அனுபவித்துச் சுவைத்துக் கொண்டிருந்தாள். அதையே அவனிடமும் கூறினாள்.

நான் இளமை பெற்றதின் பயனை இன்று தான் பெற்றிருக்கிறேன். உங்கள் போன்ற ஒரு நபர் எனக்குக் கிடைக்குமானால் என் பிறவிப் பயனே பெற்றவளாவேன். பணமும் படாடோபமும், ஆளம்பு எடுபிடிகளும் ஏவலாளரும், கார் முதலிய வாகன வசதிகளும் நிறம்ப இருக்கின்றன. ஆனால் என் மனத்திலுள்ள பெருங்குறைமட்டும் நீங்கவே இல்லை.

அதை நீக்கவல்ல அன்பர் எனக்குக் கிடைக்க வில்லை.''

என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அப்போது ஆடிக்கொண்டிருந்த பகுதியினரின் முறை முடிந்துவிட்டது. எனவே இருவரும் வந்து அமர்ந்தனர். உடன்வந்த முரட்டு மனிதன் கோபமும் ஆழமும் நிறைந்த குரலில் போதும் புறப்படு என்றான். அவள் அவன் சொல்லையே பொருட்படுத்தாமல் பேசாதிருந்தாள். அவன் கோபம் அதிகரிக்கவே அவளைக் கையைப்பற்றி இழுக்க ஆரம்பித்தான். அதை அவளால் மறுக்க முடியவில்லை என்றாலும் பிடிவாதம் செய்து பார்த்தாள். பலிக்கவில்லை. அந்த மனிதன் 'ஞானி' என்று யாரையோ அழைத்தான். ஒரு பருத்த பயங்கர உருவம் அங்கே வந்தது. அந்த மனிதன் ஞானியிடம் ஏதோ சொல்லிவிட்டுச் சென்றான். அவர்கள் போன சிறிதுநேரத்திற்கெல்லாம் உறக்கம் பிடிக்காத சந்திரமோகன் தியேட்டரிலிருந்து வெளியேறினான். தியேட்டரில் சந்தித்த அந்தப் பெண் யாரா யிருக்கக் கூடுமென்றும், அம்முரட்டு மனிதனுக்கு அவள் ஏன் அஞ்ச வேண்டுமென்றும் சிந்தித்தவாறே சென்றுகொண்டிருக்கையில் டாக்ஸி டிரைவர்'' இதுதான் ஜெயில் மெயின் ரோட்'' என்று கூறி நிறுத்தினான். சந்திரமோகன் கிழிறங்கிச் சுற்று வெளிகளைக் கவனித்தார்.

பிறகு ஏதேதோ சிந்தித்தவராய் டாக்ஸியின் பக்கம் வந்து:—

"டிரைவர், அதோ அந்த உயர்ந்த மாடியின் மீது விளக்கொளி தெரிகிறதே, அதுவென்ன கோபுரமா? அல்லது மாளிகையா?" என்றார்.

"அது சாஞ்சி மாளிகை, அங்குதான் மிராசுதார் இருக்கிறார். மிகவும் நல்ல மனிதர் ஏழை பங்காளர், ஆனால் எதிரிகளுக்கு எமன். அவரைமீறி அந்தப் பக்கம் எவரும் எதுவும் செய்துவிட முடியாது. கூடுமானவரை நியாயம் அவ்வூர் ஏழைகள் அவரால் உயிர் வாழ்பவர்கள். அதனால் அவர்களும அவருக்காக உயிர்கொடுக்கவும் சித்தமா யிருப்பார்கள்"

என்று சொல்லி முடித்தான். இச்செய்திகளைக் கேட்ட பின்னர் "மீனா" ஏன் தப்பித்துக்கொண்டு அங்கே போயிருக்கக் கூடாது" என்ற எண்ணம் எழுந்தது. எதையும் நாளை காலையில் செய்து கொள்வோம் என்றெண்ணிக்கொண்டு நேரே ஓட்டலுக்கு வந்து தன் அறைக்குள் சென்று படுத்துக்கொண்டார். படுத்த ஒரு பத்து நிமிடங்களுக்கெல்லாம் யாரோ கதவைத் தட்டிய சப்தம் கேட்டுக் கதவைத் திறந்தார். அவர் கதவின் தாளைத் திறந்தவுடன் மடாரென்று கதவு அழுத்தித் திறக்கப்பட்டது. அதை எதிர்பார்த்திருந்த சந்திரமோகன் பக்கத்தில் விலகி நின்று கொள்ளவே உள் நுழைந்திருப்பவர்களுக்கு அடிபட

வேண்டுமென்ற நோக்கத்தால் கதவைத் தள்ளியவன் உள்ளிருப்பவர் விலகிப் போகவேட்டாலென்று திறந்த கதவுடன் தரையில் குப்புற வீழ்ந்தான். உடனே விளக்கு சுவிச்சைப் போட்டார் சந்திரமோகன். அந்தக் கணமே துப்பாக்கி வெடிப்பும், விளக்கணைப்பும் நடைபெற்றது. சிறிது தெரிந்த விளக்கொளியிலேயே வந்திருப்பது யாரென்பதை அறிந்துகொண்டார். தியேட்டரில் பார்த்த 'ஞானி' என்பவன்தான் அவன். இந்த நிலையில் சிறிது சிந்திப்பதற்குள் அவன் கை மேலோங்கியது. சந்திரமோகனை பலமாகத் தாக்கிக் கீழே தள்ளிவிட்டுப் போய்விட்டான். பொழுதுவிடியும் சமயமாயிருந்தபடியால் ஓரிருவர் அந்தப் பக்கம் வந்து போகும்போது அறையில் அடிபட்டுக் கிடக்கும் சந்திரமோகனைக் கண்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். அங்கிருந்து சற்று நலம் பெற்ற நிலையிலும் மோசமில்லையென்ற நிலையிலும், இருந்தார் சந்திரமோகன்.

7

மெஜஸ்டிக் ஓட்டலின் மாடி அறையில் சரியாக விழிக்காத நிலையில் படுக்கையில் புரண்டுகொண்டிருந்த "கோபிநாத்"தை —'தந்தி' என்ற ஒரு குரல் எழுப்பிற்று. தந்தியை வாங்கிப் பிரித்துப் பார்த்ததும் காலிங்பெல்லை யடித்து, 'கால்பாய்' வசம் காப்பிக்கு ஆர்டர் செய்துவிட்டு சீக்கிரமாக உடுத்துக்கொண்டு புறப்பட்டார். விமான நிலையம் வந்தடைந்த அவர் அவசரத்திற்குத் தக்க விமானம் புறப்படும் தருவாயிலிருந்தது. எனவே உடனடியாகப் பயணமும் நடைபெற்றது. போபால்ஸ்டேட் ஆஸ்பத்திரிக்கு வந்து சேரும்படி தந்தியில் குறிப்பிட்டிருந்ததால் நேராக ஆஸ்பத்திரி வந்தடைந்தார் கோபி சிறிது நேரத்திற்கெல்லாம் அனுமதி

கிடைக்கப் பெற்று படுக்கையிலிருக்கும் சந்திர மோகனைக் கண்டார். சந்திரமோகன் முகமே அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி பிளாஸ்த்திரிகளாலும், கட்டுகளாலும் மறைக்கப்பட்டிருந்தது. என்றாலும் ஸார் என்ற குரலைக் கேட்டதும் புத்துணர்ச்சி பெற்று." கோபி வந்து விட்டாயா? நான் எதிர்பார்த்த நேரத்திற்கு முன்பாகவே வந்து விட்டாய். மிக்க நன்றி."

" தந்தி வந்ததும் பிளேன் ரெடியாக இருந்தது. சற்றுப் பிந்தி யிருந்தால் இன்று மாலையில் தான் வந்து சேர்ந்திருக்க முடியும்."

நானும் மாலையில் நீவந்து விடுவாயென்று தான் எதிர்பார்த்தேன்."

" ஆமாம்! இதெல்லாம் என்ன காயங்கள்; எப்படி ஏற்பட்டது."

" இதிலென்னப்பா ஆச்சரியம். நாம் ஈடுபட்டிருக்கும் காரியமென்ன 'முல்லைக்குவியலில் முகத்தை அழுத்தி அதன் அடியிலிருக்கும் பொருள் என்ன என்பதைக் கைபடாமல் கண்டுபிடிக்கும் முயற்சியிலா ஈடுபட்டிருக்கிறோம். முரடர்களுடன் மோதவும் மோசக்காரர்களின் வாசஸ்தலங்களை வட்டமிட்டுத் திரியவும் தானே வந்திருக்கிறோம். அதில் இதெல்லாம் மிகச் சர்வ சாதாரணம். உயிருடன் விட்டு வைத்திருக்கிறானே! அதை

எண்ணிச் சந்தோஷப்படு. சரி. சரி! அதிகம் பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. இங்குதான் திருட்டு நோட்டுக்களின் ஏஜெண்டுகளும், ஸ்டாக் வைத்திருக்கும் இடங்களும் இருக்கின்றன. நவஜீவன் ஓட்டல்தான் மீட்டிங் பிளேஸ் ஆட்கள் யார் யாரென்று நிச்சயமாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. பார்ப்பவர்களெல்லாம் சந்தேகத்துக் குரியவர்களாகவே தென்படுகிறார்கள். நாமும் அதிகக் கெடுபிடி வைத்துக்கொண்டால் எதிரி உஷாராகிவிடக் கூடாதே என்பதால் நானும் போலீஸிடம் அதிகத் தொடர்பு வைத்துக்கொள்ளாமல், சந்தர்ப்பத்திற்கு மட்டும் உத்தியோகத் தகுதியைப் பயன்படுத்திக்கொண்டு, பிறருக்குச் சந்தேகம் ஏற்படாவண்ணம் ஊருக்குப் புதியவன் போலவும், ஏதும் அறிய முடியாத அறிய விரும்பாதவன் போலவும் இருந்து வருகிறேன். இதில் முக்கியமான ஒரு புள்ளி 'மினு' என்னும் பெண். அவளைப் போலீஸார் கைது செய்து சிறைவிட்டு வைத்திருந்திருக்கிறார்கள். அவளைச் சென்று கண்டால் எப்படியும் விவரம் அறிந்து கொள்ளலாமென்று சிறைச்சாலைக்குச் சென்றபோது அவள் தப்பியோடி விட்டதாகவும், எங்கும் அகப்படவில்லையென்றும் தெரிந்தது. காவலும் அதிகமாக இருக்கிறது. ஆகவே அவள் மீண்டும் பயன்பட வேண்டுமென்ற எண்ணத்துடன்

அவள் ஆட்களிலேயே யாராவது அவளைத் தப்பித்துக் கொண்டு போயிருக்க வேண்டும். அல்லது அவள்தானே தப்பியோடியிருக்க வேண்டும். ஆட்கள் கடத்திச் செல்ல எந்த வகையுமில்லை. எனவே அவள்தானாகவே தான் சென்றிருக்க வேண்டும். ஆகையால் அவள் இந்தக், கூட்டத்தாரால் வலுவில் கைப்பற்றப்பட்டவளாகத்தான் தெரிகிறது. நான் நேற்று இரவு சென்று கண்டதில் ஜெயில் மெயின் ரோட்டிலிருந்து பக்கத்தில் செல்கின்ற ஆற்றின் அக்கரையில் சாஞ்சி யென்ற ஊரொன்று இருக்கிறது. அங்கே தான் அவள் சென்றிருக்க வேண்டும். அல்லது பக்கத்து ஊர்களில் இருக்க வேண்டும். நீ எப்படியும் அவளைச் சந்திக்க வேண்டும். உடனே புறப்படு.''

என்று கூறி ஒரு போட்டோவையும் அவனிடம் கொடுத்துச் செல்லும்படி கூறினார். இவற்றையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த கோபி—வெளியில் வந்ததும் அன்றைய, தினப் பத்திரிகையைப் பார்த்தான். அதில் "சிறையிலிருந்து தப்பிப்போன மீனுவைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூபாய் இருநூற்றைம்பது இனாம் வழங்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதைக் கண்டவாறே வந்து கொண்டிருக்கும்போது ஒரு மனிதன் பின்புறமாக வந்து 'ஸார்' என்று

கூப்பிட்டான். "நீங்கள் துப்பறிபவர்தானே உங்களுக்கு நான் உதவி செய்கிறேன். பரிசும் கிடைக்கச் செய்கிறேன். ஆனால் உங்களுக்குக் கிடைக்கும் பரிசில் எனக்குப் பாதி கொடுத்து விட வேண்டும்" என்ருன். அவன் பேச்சில் கோபிக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும் அவன் தரும் செய்தியிலிருந்து ஏதாவது நுணுக்கம் தெரியக்கூடும் என்று எண்ணி அவனைத் தனியாக அழைத்துச் சென்று விசாரித்த தில் அவன் கூறினுன்.

"நீங்கள் தேடித் திரியும் மீஞ எங்கிருக்கிருளென்பது எனக்குத் தெரியும்."

"எப்படித் தெரியும்"

"அதையெல்லாம் கேட்காதீர்கள். அவளைப் பிடித்துக் கொடுத்தால் பரிசு கிடைக்கும் என்ற செய்தி பத்திரிகைகளில் வந்திருப்பதும் தெரியும்"

"ஆனல் அந்தப் பரிசை நீயே வாங்கிக் கொள்வதுதானே! எதற்காக என் மூலம் பாதித் தொகை எதிர்பார்க்கிருய். முழுவதுமே நீ பெறலாமே."

"பெறலாம். என் உயிர் நிலைபெருது. அவள் இருக்கும் இடம் சாஞ்சி மிராசுவிடம். சாஞ்சி மிராசுவை எதிர்க்க யாரும் அஞ்சுவர். அவர் அவ்வளவு நேர்மையான பேர் வழி.

அதனல் அவரிடம் அடைக்கலம் புகுந்திருக்கும் மீனுவை யாரும் கைப்பற்ற முடியாது,"

"குற்றவாளிக்குப் பாதுகாப்புத் தருவது பெருங்குற்றம் என்பது தெரியுமா உனக்கு"

"அத்துடன் மீனு குற்றமற்றவள் என்பதும் தெரியும். சிறையிலிருந்து தப்பியோடிய குற்றமொன்று தவிர அவள் எந்தக் குற்றமும் செய்யவில்லை."

"இவ்வளவு தெரிந்த நீயேன் மீனுவை மீண்டும் கைதாக்க எண்ணுகிருய்."

"அது என் சொந்த விஷயம். வஞ்சம் தீர்த்துக் கொள்கிறேன். அவள் அமைதியாக இன்பமாக வாழக் கூடாது."

"ஏன்"

"என்னை அமைதி குலைத்தாள், என் உள்ளத்தை அலைமோதச் செய்தாள், அவள் அழகுக்கு என் இதயத்தை அடிமையாக்கிக் கொண்டாள்"

"தவறெல்லாம் நீ செய்திருப்பதாகத் தானே தெரிகிறது. சுருங்கச் சொன்னல் நீ அவளைக் காதலித்தாயாக்கும்"

"ஆமாம்! அவளென்னைக் கால்தூசுக்கும் கடையனுகப் புறக்கணித்துவிட்டாள். விரும்பிய என்னை வெறுத்தாள். நான் அவள் விரும்பும் அமைதியை அறுக்கிறேன்.'!

"அப்படியெல்லாம் செய்யாதே! ஒருவர் உள்ளத்தை அறிந்து கொள்ளாமல் ஒருவர் உள்ளம் மட்டும் விரும்புவது காதலாகாது. வெறுப்பு இருவருக்கும் சொந்தம். அவள் உள்ளத்தில் உனக்கிடமில்லையென்றுவெறுக்கிருள். உரிமை உனக்கு மட்டுந்தான இருக்கிறது. அவள் உள்ளத்தின் முடிவு அவளுக்கு. ஆகையால் நீ கூறுகிறபடி உன் வார்த்தைகள் பொய்யல்லவென்ருல் நாளையே உனக்குப் பணம் கிடைக்கும். இல்லை பிராணுபத்துதான் கிடைக்கும்."

"நீங்களும் ஏமாற்றிவிட மாட்டீர்களே!"

"நிச்சயமாக எமாற்ற மாட்டேன். உம்...... உன் விலாசம் இருப்பிடம் இவைகள் எங்கே! நான் இன்ன காரியத்திற்காக இங்கு வந்திருக்கிறேனென்பது உனக்கெப்படித் தெரியும்"

"தெரியவழி யிருந்தது தெரிந்துகொண்டேன். இப்போது அதன் வகையை நான் தெரிவித்தால் அது பலருக்குத் தீமை ஏற்பட வழியாகும். ஆகையால் அவற்றை யெல்லாம் கேட்காதீர்கள், சென்று வெற்றியுடன் வாருங்கள்"

என்று கூறி விடை பெற்ருன். ஒருவன் பிறருக்குத் தீமை செய்ய எண்ணும்போதும் அது எவ்வாருே மற்ரெரு சாராருக்கு நன்மையாகிறது என்ற முறையிலேற்பட்ட செய்

தியை உடனே வந்து சந்திரமோகனிடம் கூறி விட்டுத் தான் சாஞ்சி போகப் புறப்பட்டான். அங்கிருந்து சாஞ்சி செல்லும் வகைக்கு ஒரு டாக்ஸி ஏற்பாடு செய்து கொள்ள விரும்பி, தோற்றத்தில் நல்லவனுக இருக்கும் ஒரு டிரைவரை அமர்த்திக்கொண்டு, அவன் குணதிசயங்களைக் கண்டு கொள்ளும் பொருட்டு மெள்ள ஒரு ஓட்டலுக்கு அழைத்துச் சென்று டிபன் வாங்கித் தந்து, சாதுர்ய மாகப் பேச்சின்மூலமே அவன் மனப்போக்கை யறிந்துகொண்டார். அதன் பிறகு அவ னிடமே விவரங்களைக் கூறி சாஞ்சிக்கு வர ஏற்பாடு செய்துகொண்டார்.

அவனும் சந்திரமோகனைக் குறிப்பிட்டு "அவர் கூட என் வண்டியிலேதானுங்க வரு வாரு" என்று தன் வாடிக்கையைத் தெரி வித்தான்.

கோபி, சந்திரமோகன் தன்னைப் பிறர் அறி யாதவாறு இருப்பதாகச் சொன்னதையும், இங்கு யார்யாரோ அவனைப்பற்றித் தெரிந்து கொண்டிருப்பதையும் எண்ணிக்கொண்டே சென்றார்.

8

டாக்ஸி சாஞ்சியைச் சென்றடைந்தது. மிராசுவின் பங்களாவுக்குச் சற்றுத் தொலைவிலேயே காரை நிறுத்திவிட்டு, கோபிமட்டும் மிராசுவின் பங்களாவை நோக்கி நடந்தான். அந்த பங்களா பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் அமைப்பாகவும் இருந்ததே தவிர அதிக ஆள் நடமாட்டம் இல்லாதது போலவே தோன்றிற்று. அதிலும் கோபி சென்ற சமயம் அங்கு யாருமில்லை. ஆனால் ஒரு மெல்லிய பாட்டுக் குரல் கேட்டது. கோபி தைரியமாக வீட்டின் உள்நுழைந்து, வீட்டின் வாயிற்படிக் கதவை மெள்ளத் தட்டினான். யாரது என்ற குரல் வந்தது. அடுத்து 'மீனா' என்று பழகியவன்போல அழைத்தான் கோபி. மறுமொழியில், இருப்பது மீனாதான் என்று அறிந்து கொண்டான். அல்லது வேறு யாராகவேனும்

இருக்கக் கூடுமோ என்றெண்ணிக்கொண்டு நிற்கையில் யாரோ கதவின் பக்கம் வந்து நிற்பது போன்ற சிறு ஒலி கேட்டது. நான் வேறு யாருமில்லை! உன் நன்மைக்காக உன்னைத் தேடி வந்திருக்கிறேன் என்றான் கோபி! அந்த வார்த்தையைக் கேட்டதும் ஒரு கணம் அவளுக்குப் பழைய நினைவுகள் வந்து அலை மோதின. வந்திருப்பது யூசுப்கானாக இருக்குமோ என்றெண்ணினாள். அவ்வாறு எண்ணியதும் அவளுக்கு அச்சமேற்படவில்லை. மாறாகத் தைரியமேற்பட்டது. உடனே இடையில் மறைத்து வைத்திருந்த ரிவால்வரை யெடுத்துக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு கதவைத் திறந்து அதன் பின்புறம் ஒழிந்து கொண்டாள். யூசுப்கானாக இருந்தால் உள் நுழைந்ததும் கதவைச் சாத்திவிட்டுச் சுட்டு விட வேண்டுமென்பது அவளுடைய திட்டம். ஆகவே மிக உஷாராக இருந்தாள். அவன் சந்தேகப்பட்டு மெள்ள அடியெடுத்து வைத்துத் தன்னைத் தாக்குவதானாலும் குறி தவராக் கூடாது என்பதற்காக கதவின் முனையிலேயே இருந்தது துப்பாக்கி முனை.

கதவு திறக்கப்பட்டதும் திறந்த நபர் எதிரே இல்லாத காரணத்தால் மெள்ளக் கதவு இடுக்கின் வழியாகப் பார்த்தான். அவன் கவனமெல்லாம் உள் நுழையும் உருவத்தின் மேலிருந்ததால் இடுக்கு வழியாகப் பார்த்ததை

அவள் கவனிக்கவில்லை. சற்று நேரமானதும், "யாரது உள்ளே வரலாமே" என்றாள்.

கொஞ்சம் நகைத்து, கதவு முனையிலிருக்கும் துப்பாக்கியால் சுட்டுவிட்டால் என்றான் கோபி. வேற்று மனிதனைக் கண்டதும் கொஞ்சம் நாணமும், அத்துடன் வந்திருப்பது யாரோ என்ற அச்சமும் தோன்ற-'யார் நீங்கள்' என்றாள், கோபி மெதுவாக உள்ளே வந்து, கதவைச் சாத்திவிட்டு, "என்னைக் கண்டு நீ அஞ்சத் தேவையில்லை. ஆனால் உன்னை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் பொய் சொல்லத் தேவையில்லை என்றுதான். இதோ தற்காப்புக்கு என்னிடமுள்ள துப்பாக்கியை வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன். உன்னை நான் நம்புகிறேன்" என்று கூறிய வண்ணமே தன் சட்டைப் பையிலிருந்த ஒரு துப்பாக்கியையும் எடுத்துக் கொடுத்தான். அதன்பிறகு அவள் பேசத் தொடங்கினாள், "நீங்கள் யார்? எதற்காக இங்கு வந்தீர்கள். நானிங்கிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும். உங்களுக்குத் தெரிந்ததுபோல் யாருக்கேனும் தெரியுமா" என்ற கேள்விகளைக் கேட்டாள்.

"நான் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவன். நீ இங்கிருப்பது இன்னும் ஒரே ஒரு மனிதருக்குத்தான் தெரியும். ஆனால் அவரால்

உனக்கெந்தக் கேடும் விளையாது; ஏன்! இனி உனக்குக் கேடே கிடையாது.!"

"ஆமாம்! நீங்கள் என்னை நாடி ஏன் வந்தீர்கள். நீங்கள் இங்கு வந்திருப்பதை மிராசுதார் அறிந்தால் உயிருக்கே ஆபத்து வந்தாலும் வரலாம்."

"எனக்கந்தப் பயமே கிடையாது."

"ஏன் துப்பறிபவரென்றால் உயிருக்கு ஆபத்துவராதென்ற நினைப்போ"

"இல்லை! உன்னைப்போன்ற அழகி ஒருத்தியை நான் பார்த்த பின்னும், அவளுக்கு உதவி செய்யத்தான் வந்திருக்கிறேனென்று அவளிடமே கூறிய பிறகும் அவளே சம்மதித்து அவன் உயிர் போகட்டும் என்று எண்ணுகின்றபோது உயிர் எதற்காக இருக்க வேண்டும்"

"உங்கள் துப்பறியும் இலாகாவில் இது மாதிரிக் குறும்புகளும் கற்றுக்கொடுத்தனுப்புகிறார்களோ"

"குறும்புக்கு இனுவர்ஸிட்டிதான் நீ இருக்கிறாயே போதாது! போகட்டும் மிராசுதாரென்ன உன்னைக் கைதியாக்கி வைத்திருக்கிறாரா!"

"அது உங்கள் போன்றவர்களின் வேலை. கைதியாக்குவதும், கம்பி எண்ண வைப்பதும்.

இங்கே நான் சுதந்திரப் பறவை. என் சுதந்திரத்தைப் பறிக்க எண்ணும் பைரிகளுக்கு நான் எமன். எனக்குத் துணை இதோ இந்தத் துப்பாக்கி.''

"இல்லை! இப்படி ஒரு மாளிகையில் உன்னைத் தனியாகப் போட்டு வைத்திருக்கிறாரே! ஒரு வேளை கண்ணாடி மாளிகையாயிருந்தாலும் என்னைப் போன்றவர்கள் காட்சிப் பொருளாக வாவது காண முடியும்.''

"அது, கண்ணாடியா யிருந்தா - கண்டதோடமட்டுமில்லாமல், காட்சிகைக்கு வரவேண்டுமென்ற எண்ணத்தில் கண்ணாடியில் மோதி - கண்ணாடியையும் உடைத்து கண் - காது - மூக்கு முகம்ண்ணு படுகாயப்படுத்த - அப்புறம் அவனுக்குப் பரிகாரமும் பரிபக்குவமும் நாமே செய்ய வேண்டிவரும் என்பதற்காகத்தான், கண்ணாடியை நீக்கிவிட்டுக் கல்லாலெ சுவர் வச்சிருக்குது.''

"எல்லாம் சரி! நீ ஏன் சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சு ஓடிவந்தாய். அது எவ்வளவு பெரிய குற்றமென்று யோசித்தாயா?''

"அந்தக் குற்றத்தைப் பார்க்கப் போனால் உயிரல்லவா போயிருக்கும்''

"ஏன் உயிர் போகணும்''

"கழுத்தை நெறித்தால் உயிர் போகாமல் ஒட்டிக்கொண்டா இருக்கும்.''

" கழுத்தை யார் நெறித்தது."

" அவள் யாரோ என்ன காரணத்துக்காகவோ சிறைச்சாலைக்கு வந்து விட்டாள். அவளைக் கண்டவுடனேயே எனக்கு என்னையும் அறியாமல் ஒரு கலக்கம் ஏற்பட்டது.

" அவ்வளவு கோர சொரூபமோ."

" உருவத்தில் கோரமில்லாவிட்டாலும் அவள் ஒவ்வொரு செயலும் கோரத்தின் தனி உருவமாகவே யிருந்தது. அப்போது மேலும் ஒரு செய்தி என் நினைவுக்கு வந்தது. யூசுப்கான் என்னைச் சந்தித்தபோது உனக்கு ஆபத்து நேரிடுமானல் அப்போது இந்த யூசுப்கானின் முயற்சி முன் நிற்கும் என்று கூறியிருந்தான். அவன்தான் அனுப்பி வைத்தானே என்று எண்ணினேன். ஒருநாள் நான் நன்ருகத் தூங்குகின்ற சமயம். யாரோ என் காதுகளின் பக்கம் கைவைப்பதுணர்ந்து திடுக்கிட்டு அலறிவிட்டேன். உடனே காவல் காரர்கள் வந்தார்கள். அதற்குள் ஒரு உருவம் மெள்ள அகன்று சென்றது. அந்த உருவம் அவள் படுக்கையுடன் சென்று மறைந்து விட்டது."

" அப்படியானல் அவளுன்னைக் கொலை செய்ய எத்தனித்தாள் என்று சொல்"

"கொலையும் செய்திருப்பாள். நான் திடுக்கிட்டு எழுந்திராது போனல்."

"யாரந்த பூசுப்கான்."

"அவன்தான் இந்தத் திருட்டு கோட்டு களின் ஆரம்ப ஸ்தலம். அவன் என்னைச் சந்தித்து—அவனுக்கு ஏஜண்டாக இருக்கச் சொல்லி—நான் மறுக்க முடியாதவாறு ஆசை காட்டி—அந்த ஆசையை நான் விரும்ப வில்லையென்றாலும் என் அழிவை ஏற்க நேரிடு மென்று அச்சுறுத்தித் தன் வசப்படுத்திக் கொண்டான்."

"பிறகு நீ சிறையிலிருந்து எப்படித் தப் பித்து வந்தாய் எவ்வாறு முடிந்தது"

"எனக்கு அழகையும் ஆற்றலையும் படைத்த இயற்கை, என்மீது பிறருக்கு அனு தாபமும் அபிமானமும் ஏற்படக் கூடிய தோற் றத்தையும் உண்டாக்கி யிருக்கிறதென்று நம்புகிறேன். சிறைச்சாலைக்குச் செல்லும் பாதை வழியே கூட நான் சென்றதில்லை. ஆனால் இதற்கு முன் நான் கனவிலும் கண் டறியாத ஒரு வேலையைச் செய்யத் தொடங் கியதால் ஏற்பட்ட பலன் சிறைச்சாலை என் பதை முதலிலேயே சிறை அதிகாரியிடம் கூறினேன். அவரும் நான் கூறுவது உண்மை யென நம்பினார். அதனால் கைதிக்குரிய கொடுமைகள் பல குறைந்தன. அத்துடன் கைதிகள் மகிழ்வுக்காக ஏற்பட்டிருக்கும் கும் பொழுதுபோக்குக் குழுவில் (Prisoner's

Recreation Club) நான் ஆட்டக்காரியாகச் சேர்க்கப்பட்டேன். அப்போது சமீபத்தில் நடைபெறக்கூடிய ஒரு நாடகத்தில் நான் நடனமாடுவதாகவுள்ள கட்டங்கள் சேர்க்கப் பட்டிருந்தன. அதற்கான ஒத்திகைகளுக்குச் சென்றுவந்து கொண்டிருந்தேன். அன்று இரவு—என் துணைக் கைதி என்னைக் கொலை செய்ய முயற்சித்த இரவின் மறுநாள்—நான் ஒத்திகைக்குச் செல்லுகின்றபோது சற்றே இருள் சூழ்ந்து வருகின்ற மாலைப்பொழுது, கைதிகளுக்காக, கறிகாய் வாங்கிவரும் லாரி அங்கே நின்றிருந்தது. அது புறப்படும் சமயம் என்பது தெரிந்தது. சூழப் பார்த்துக் கொண்டேன். என்னை யாரும் பார்க்க முடியாது. லாரி வெளியே செல்லும் பாதை சிறையின் பின்புறமாக—ஆகவே அதிகாரிகளின் பார்வையிலும் நான்பட வழி கிடையாது. அவ்வழியின் கதவு பூட்டப்பட்டிருக்கும். லாரி; வந்ததும் ஒரு காவலாள் கதவைத் திறந்து விட்டுப் பூட்டிவிடுவான். எனவே நான் சுலபமாக வெளிவந்துவிட்டேன். வருகிற வழியில் அவர்கள் ஒரு இடத்தில் டீ அருந்துவதற்காக இறங்கினார்கள். அவர்கள் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் நான் கீழிறங்கி அடுத்த பக்கத்திலுள்ள ஆற்றங்கரையின் வழியாகவே சென்று ஆற்றில் நீந்தி அக்கரை சேர்ந்தேன். நிச்சயமாக என் ஆட்டம் வரவேண்டிய கட்டத்தில் என்னைத் தேட எத்தனிப்பார்கள்

என்பதை யறிவேன். அதற்குள் கரைசேர்ந்து புடவையின் ஈரத்தை உலர்த்திக்கொண்டு மெள்ள நடந்து சாஞ்சியை யடைந்தேன். சாஞ்சியின் காவல் மிராசுதாருடையது. அங்கே பிடிபடுகிறவர்கள் அவருடைய நேரடியான விசாரணைக்குரியவர்கள். ஆகவே அவர் விசாரணைக்குள்ளான நான் இந்த இடத்தை யடைந்தேன். அவர் பாதுகாப்பி லும் என் தற்காப்பிலும் இருந்து வருகிறேன்''

"மிகவும் கெட்டிக்காரிதான் நீ! ஆனால் இப்போது நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். என்னை நீ நம்பலாம். உனக்கு யாராலும் எந்த விதத் தீங்கும் நேரிடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ குற்றமில்லாதவள் என் பதை ஓரளவு யூகித்துக் கொண்ட பிறகுதான் உன்னை நாடி நான் தனிமையில் வந்தேன். இல்லாவிடில் போலீஸ் சகிதம் நான் வந்திருக் கக் கூடும். நீ நினைக்கலாம் மிராசுதாரிடம் போலீஸ்கூட ஒன்றும் செய்ய முடியாது என்று. ஆனால் அவருக்குத் தெரியும் எது வரை தான் போலீஸை எதிர்க்க முடியு மென்று. ஆக, நீ இப்போதே என்னுடன் புறப்படு. அந்த யூசுப்கான் அல்லது அவன் துணைவர்கள் யார் என்பதைக் காட்டு. அது வேண்டாமென்றால் அவர்கள் தங்குமிடம் சந்திக்கும் இடங்களைச் சொல். எனக்கு உதவி யாக இரு.''

"ஆமாம்! நீங்கள் இப்போது என்னை நம்பித் துப்பாக்கியைக் கொடுத்துவிட்டுச் சும்மா இருந்து பேசிக் கொண்டிருப்பதைப் போல—என்னையும் உடன் வைத்துக்கொண்டு உங்கள் நம்பிக்கையின் வழி நடக்க ஆரம்பித்துவிட்டால் ஆபத்தை அழைப்பனுப்பி ஏற்றுக்கொண்டது போலல்லவா இருக்கும்"

"அப்போதும் நீ உடனிருக்கிறாயல்லவா! மீறு உன் புத்திக் கூர்மையையும் சாதுர்யத்தையும் நான் பாராட்டுகிறேன். உண்மையைச் சொல்ல வேண்டுமானால் நீங்கள் யாவரும் வெறுக்கத் தகுந்த பூசுப்கானை நான் பாராட்டுகிறேன்"

"பாராட்டுகிறீர்களா. நாசமாப் போச்சு! ஐய்யா இப்போதுதான் நீங்கள் ஆபத்திடம் அடிபணிகிறீர்கள்."

"அவசர முடிவுக்கு வந்துவிட்டாய்! அவன் உன்னைப் பயன்படுத்தியிராது போனால் நானுன்னைச் சந்திக்க முடியாதல்லவா! தவிரவும் நீ நினைப்பது போல நான் ஏமாந்து உன்னிடம் துப்பாக்கியைக் கொடுத்து விடவில்லை. கடைசி உயிர்க்காப்பு என்று சொல்லுவார்களே அதுபோல (அடுத்த பையிலிருந்து மற்றொரு துப்பாக்கி) இதோ பார் இது இருக்கிறது. உன் கையிலுள்ள துப்பாக்கியின் வெடிப்பு, சத்தத்தை உண்டாக்கும். இதிலிருந்து வெளிப்படும் குண்டு சத்தமில்லா

மலே புறப்பட்டுத் தன் தொழிலை முடித்து விடும். மேலும் இந்தியாவிலேயே குறி வைத்துச் சுடுவதில் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நானே முதல் பரிசு வாங்கி யிருக்கிறேன். எனவே ஓரளவு வைத்த குறி தப்பாமல் சுட முடியும் என்ற நம்பிக்கையுண்டு. இன்னென்று உன்னிடம் கொடுத்த துப்பாக்கியிலிருப்பது வெறும் வெடிகுண்டு. உயிரைப் போக்காது.

“அப்படியானால் என்னை ஏமாற்றத்தானே செய்தீர்கள்”

“இல்லையே! நீ என்னைச் சுட எண்ணினால் [illegible]தானே உன் எண்ணத்துக்கு ஏமாற்றம். துப்பாக்கியை உன்னிடம் தந்தது உன் அச்சம் நீங்குவதற்காக, சரி. சரி. புறப்படு”

“மிராசுதாரரிடம் ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ள வேண்டாமா! அவர் என்ன எண்ணுவார்”

“எந்த எண்ணமும் அவருக்கு ஏற்படாமல் உன்வரையில் மகிழ்ச்சிச் செய்தியைக்கொண்டு வந்து நானே அவருக்குத் தருகிறேன், வா.”

9

அமிர்தலாலைப்பற்றிய செய்திகளைத் தான் அறிந்திருந்த வகையில் மீனா சொன்ன போது அமிர்தலால் ஒரு பிளாக் எங்ரேவர் என்றும், திருட்டு நோட்டுகளுக்குரிய பிளாக்கு களெல்லாம் அவனால் செய்து தரப்பட்டதுதானென்றும், அவனுக்கும் யூசுப்கானுக்கும் ஏற்பட்ட சிறு மனமாற்றத்தால் பாகிஸ்தானை விட்டு வெளியேறி யூசுப்கான் வர முடியாத இந்திய எல்லைக்கு வர முயற்சித்தபோது, ஒரு நாய்க்கு மருந்தை இஞ்செக்ஷன் செய்து அந்த நாய்க் கடியிலேயே இறந்து போனது போன்றதொரு விசித்திரக் கொலை செய்து விட்டான் யூசுப்கான் என்ற விவரத்தையும் தெரிவித்தாள். மற்றும் அவளிடம் கேட்டு

அறிய வேண்டியவைகளை அறிந்துகொண்டு அவற்றையெல்லாம் பத்திரத்தில் பதிவு செய்து, அவளிடம் கையொப்பம் வாங்கப் பட்டது. கையெழுத்திடுகின்றபோதும் பக்கத் தில் நிற்கும் கோபியைக் கேட்டுக் கொண் டாள், உனக்கு ஆபத்துவராது நானிருக் கிறேனென்று கூறினன். கையெழுத்தைப் போட்டதும் நாணத்துடன் அவன் பக்கத்தி லேயே வந்து நின்றுகொண்டாள். பிறகு போபாலுக்கு விமானமேறினர்.

விமானம் போபால் நிலையத்தை வந்தடை ந்ததும் ஒரு மனிதன் மிக வேகமாக டில்லி செல்லத் தயாராய் யிருக்கும் விமானத்தை நோக்கிச் சென்ருர். அவனைக் கண்டதும், சந்திரமோகன் அவன்தான் தன்னைத் தாக்கிய 'ஞானி' என்பவனென்று கூறி நிறுத்து வதற்குள் அவன் விமானத்தில் ஏற ஆயத்த மாய் விட்டான். அவ்வாறு ஏறப் போன அவன் மீனுவைக் கண்டதும் சற்றே திகைத்து நின்று சிறிதும் எதிர்பாராதவிதமாக மீனுவை நோக்கிச் சுட்டான். அதைத் தடுப்பதற்காக, வெங்கடேஷ்வர் (C. I. D. இன்ஸ்பெக்டர்) மீனுவைக் குறிப்பிலிருந்துவிலக்கினுர். எனவே அந்த குண்டு வெங்கடேஷ்வரின் மார்பைத் துளைத்தது. உடனே பல குண்டுகள் இவர் கள் பக்கமிருந்து புறப்பட்டு அவனை வீழ்த்தி பது. பின்னர் அவனை சோதனை செய்ததி

லிருந்து அவன் பெயர் அஸ்லாங் ஞானி யென் பதும், அவன் கைவசமிருந்து கைப்பற்றப் பட்ட நோட்டுகள் திருட்டுநோட்டுகள் என் னும் தெரிய வந்தது. பின் இறந்த வெங்கடேஷ் வருக்காகச் சிறிது அனுதாபம் தெரிவித்து விட்டு, உடனடியாக மீனுவின் குறிப்புப்படியே முதலில் திரிலோக்சந்த்ரகபூரை நவஜீவன் ஹோட்டலில் சென்று கைது செய்தனர். அவனைக் கொண்டே முன் அமிர்தலால் கூறி யதுபோலபெரும் மாயாவியும் மாபயங்கரமான வனுமான யூசுப்கானைப் பிடிக்கச் சென்ற போது திருலோக் தப்பிவிட்டான். அவனை விடாது தொடர்ந்து சென்று பார்க்கையில் பெரியதொரு ப்ளிமௌத் காரில் திருலோக் கும், யூசுப்கானும் போய்விட்டனர். இதற் காகவா இப்போது சந்திரமோகன் அஞ்சுவார். சற்றும் அசையாமல் அங்கேயே நின்றார். அவர் வியூகப்படியே அங்கங்கே காவல் நின்ற போலீஸாரால் அவன் கைது செய்யப்பட் டான்.

இது நடைபெற்ற நான்கு நாட்களுக்குப் பின்னர், பத்திரிகையைப் படித்துக்கொண் டிருந்த சந்திரமோகன், "மீனு உங்க அப்பா அம்மா இன்று வருகிறார்களாம்" என்று சொல்லி முடிப்பதற்குள் அவர்களும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள், காணமல் போன காஷ்மீர் சுந்தரியைப் பெற்றதுடன் அதிரூப

சுந்தரனுகக் காட்சிதரும் மருமகனையும் பெற்ருர்கள்.

இந்த மகிழ்ச்சியுடன் மற்ருெரு செய்தியும் வந்தது. மீரு கோபிக்கு வாழ்த்தும் பிரமோஷனும், சந்திரமோகன் தலைமைப் பதவிக்கும் மாற்றப்பட்டார்கள் என்பதே அச்செய்தி. அவர்கள் நினைவிலிருந்து எப்போதும் அகலவில்லை அந்த காஷ்மீர் சுந்தரி.

காஷ்மீர் சுந்தரி

சுந்தரி: அழகின் இருப்பிடம், அலங்காரத்தின் மாளிகை, மாதரும் கண்டு மயங்கத் தக்க மங்கை. அவள் காணாமற் போனாள்.

கண்டுபிடிக்கத் தேடுவோரைவிட அவள் காணாமற்போனதின் மர்மத்தைத் தேடிக் கண்டு பிடிக்கப் புறப்பட்டார் துப்பறியும் நிபுணர் சந்திரமோகன்.

அவரது முயற்சிகளிலே கிடைக்கப்பட்டவை காஷ்மீர் சுந்தரியின் உண்மைப் பெயர், அந்தப் பெயருடன் அவள் வாழ்ந்தவகை, காஷ்மீர் சுந்தரியாக ஆன விவரம், புது மாற்றத்திலே அவள் செய்து வந்த செயல்கள், அதனைப் பயன்படுத்தி வாழ்ந்தவர்களின் வரலாறு ஆகியவைகளை நாவலின் உள்ளே படித்துக் காணலாம்.

அழகு ஆக்கவும் அழிக்கவும் முடியாத ஒன்றானாலும், எத்தனை பேரை எங்கெந்த விதமாக அலைக்கவும் அழிக்கவும் உதவியாக இருக்கிறதென்பதின் ஒரு விளக்கம் "காணாமற்போன காஷ்மீர் சுந்தரி"

Wrapper printed at Shanti Press, Madras-1